# தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 61 மலர் : 3

## உள்ளுறை


பக்கம்

1. உமாபதி தேவ நாயனாரின் தலைக் கொள்கை ... 97
2. முள்ளிக்குளம் "பேய்ப்படைக்கு வான் வழங்கு கொற்றத்தாள்" கோயில் ஆராய்ச்சிக் குறிப்பு ... 109
3. இரட்டைக் காப்பியத்தில் மாதவி ... 116
4. வளஞ்செறி வள்ளுவம்– வில்லிபுத்தூராரில் ... 126
5. தமிழுக்கும் சிந்தி மொழிக்கும் உறவு– புதிய கண்டுபிடிப்பு .... 133
6. மதியுடம்பட்ட மாக்கட் சீதை .... 135
7. கதையாசிரியர்களும் உத்திகளும் .... 137
8. வில்லியின் பாரதம் ஒரு கண்ணோட்டம் .... 143



ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்

பேராசிரியர் க. வெள்ளைவாரணன், சிதம்பரம்

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட், பிஎச்.டி.
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம். ஃபில்.,
துணை முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி,

புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்.,
துணைப்பேராசிரியர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி,



பதிப்பாசிரியர்: பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2018

துணர்: 61 பிரபவ — ஆனி மலர் : 3

ஜூன் — ஜூலை 1987

## உமாபதி தேவ நாயனாரின் தளைக் கொள்கை

செஞ்சொற் கொண்டல் தமிழாகரர், திருமுறை உரைமணி —
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.
தமிழ்ப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை

### 1. தளைக் கொள்கை விளங்கும் பகுதிகள் :

உமாபதி தேவநாயனாரின் 'சிவப்பிரகாசம்' சைவசித்தாந்த அரும்பொருள்களைச் சுருக்கமாக விளங்கும் அற்புதப் பனுவல். சிவஞானபோதச் செம்பொருளை உமாபதி தேவநாயனார்

இதனுள் ஆழமும் அகலமும் உடைய அரும்பாடல்களால் புலப்படுத்துகின்றார். பொது அதிகாரத்து இரண்டாம் சூத்திரத்து முப்பத்திரண்டு திருவிருத்தங்களில், 'பாசக்கொள்கை' ஆய்வு நெறியில் விளக்கப்படுகின்றது. 'திருவருட்பயனில்' மூன்றாவது அதிகாரம் 'இருண்மலநிலை' பாசம் பற்றிப் பேசுவதே. 'வினாவெண்பா'வில் முப்பொருள் பற்றிய செய்திகளும் மொழியப் படுகின்றன. 'போற்றிப் பஃறொடையில்' "முந்துற்ற, நெல்லுக்கு மிதவிடு" எனத்தொடங்கிப் "பாசப் பெருங்கயிற்றால் பல்லுயிரும் பாவிக்க, நேசத்தை வைத்த நெறிபோற்றி" என்று முடிக்கும் பகுதியில் நாயனாரின் 'பாசம்' பற்றிய முடிவுகளைக் காண்கிறோம். 'கொடிப்பாட்டு'ள் பாசம் பற்றிப் பேசி அதிலிருந்து வீடு பெறும் உயிர்களை விளக்கும் வகையில் 'தளைக்' கொள்கை விளங்குகின்றது. 'நெஞ்சுவிடுதூது'ள், "கொண்டதொரு காமனுக்கும் ..." எனத் தொங்கி "நிற்கும் நிலைபாராய் நிலையான நெஞ்சமே" என்பது வரை தளையின் இயல்பு கூறப்படுகின்றது. சங்கற்பநிராகரணத்துள்' 'சித்தாந்த சைவாசாரியர் அனுக்கிரகம்' என்ற இறுதிப்பகுதியில், முப்பொருள் உண்மை விளக்கம் உள்ளது; அதனுள் 'தளை நீக்கம்' கூறப்படும். சங்கற்ப நிராகரணத்துள் ஒப்பீட்டுத் தத்துவ ஆய்வுநெறி (Method of Comparative Philosophy) முறையை உமாபதி தேவநாயனார் மேற்கொள் கின்றார். பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சங்கிராந்த வாதம், ஈசுவர அவிகார வாதம், நிமித்தகாரண பரிணாமவாதம் (சிவாத்துவித வாதம்) என்ற அகச்சமயங்கள் ஆறனையும் எடுத்தாராய்ந்து அவ்வச் சமயக் கொள்கைகளின் பொருந்தாதன வற்றை அவர்கள் கூறிய காரணம் கொண்டு மறுக்கின்றார். அகப்புறச் சமயமாகிய ஐக்கியவாதத்தையும், புறச்சமயம் ஆகிய மாயாவாதத்தையும் உடன் வைத்து இந்நூலுள் ஆராயப்படுகிறது.

சுகதுக்கங்கள் அநுபவமாக வருதலின் ஆன்மாபிரமத்தின் வேறு என்று கூறி மாயாவாதம் மறுக்கப் பெறுகின்றது. ஐக்கியவாத சைவம் முப்பொருளை உண்டு என்று கூறி, ஆணவமலம் என்று ஒன்று இல்லை; முத்தியில் நீரும் நீரும் சேர்ந்தாற்போலச் சிவனும் சீவனும் ஒன்றுபட்டு ஐக்கியமாம் என்று முடிக்கும். ஆணவ மலத்தாலேயே ஆன்மாக்கள் பிறப்பிறப்பிற்பட்டுச்சுழலும் என்று நாயனார் மறுக்கின்றார். சிவசமவாதி 'பதிபசுபாசம் என்னும் மூன்றிற்கும் மூன்று அறிவு உண்டு. பதி பசுக்களைத் தானே ஆட்கொள்ளும். பசு பதியினை உபாசித்து முத்தியில் பதித்தன்மை உற்றுப் பஞ்சகிருத்தியம் உற்றுச் சிவசமயம் எய்தும்' என்று கூறும் கருத்தை நாயனார் மறுப்பர்;

"ஆதித்தனையின்றிக் காண்டல் செல்லாக் கண்போலப் பதியறிவால் அன்றிப் பசுபாசங்களுக்கு விளக்கம் இல்லை. ஆன்மாக்களால் பதி பயன்பெற வேண்டுவதின்று; ஆதலால் தானே ஆட்கொள்ள மாட்டாது" என்பர் — இவ்வாறு சங்கற்பமும் அவற்றின் நிராகரணமும் ஆக சங்கற்ப நிராகரணம் விளங்குகின்றது. இம்மறுப்புக்களில் தம்பதிக்கொள்கை, பசுக் கொள்கை, பாசக்கொள்கைகளை நாயனார் ஊடுருவுமாறு செய்துள்ளார். இவை அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்க்குங்காற் புலனாகும். 'தளை' பற்றிய விளக்கங்களே இக்கட்டுரையில் ஒப்பாய்வு செய்யப் பெறுகின்றன.[1]

## 2. மும்மலங்கள் — பொதுக்குறிப்புகள் :

முப்மலங்களுள் எதனையும் இறைவன் தோற்றுவிக்கவில்லை; ஆகவே அவை யாவும் அனாதி எனப்படும்; அவற்றுக்கு ஆதியும் அந்தமும் இல்லை. அவற்றின் செயல்களே இறைவனால் நிகழ்கின்றன; அவற்றிற்கு ஆதியும் அந்தமும் உண்டு. மூன்று மலங்களும் தத்தம் காரியங்களைச் செய்யும்படி அவற்றின் வழி நின்று செய்விப்பது இறைவனின் சக்தியே ஆகும். அது மலத்தின் வழிநின்று மறைத்தலைச் செய்விப்பதால் 'திரோதானமலம்' என்று அதுவும் ஒரு மலமாக வழங்கப்படும். மலம் பரிபாகம் எய்திய பொழுது அந்தச் சக்திதானே அருட்சக்தியாய் ஆன்மாவில் பதியும்; 'திரோதான சக்தி' 'அருட்சக்தி' என அவ்வாறு இரண்டாகப் பகரப் படுதல், 'செயல்' பற்றியே; பொருள் பற்றியன்று என்பது சித்தாந்த முடிவு. இம்முடிவை உமாபதி தேவ நாயனார் ஆய்ந்து வெளிப் படுத்தும் திறன் அழகியது; நுட்பமானது.

### 2.1. மும்மலம் — தொன்மை : இயற்கை: சிவப்பிரகாசச் செய்திகள் :

சிவஞான போதம் இரண்டாம் நூற்பாவுள், 'இருவினை அதிகரணத்துள்' கூறப்படும் வெண்பாக் கருத்துச் சிவஞானசித்தி யாருள்ளும், சிவப்பிரகாசத்துள் விளக்கம் பெறுகின்றது.[2]

"நெல்லுக் குமியும் நிகழ்செம்பினிற் களிம்பும்
சொல்லிற் புதின்றது தொன்மையே — வல்லி
மலகன்மம் அன்றுளவாம்; வள்ளலால் பொன்வாள்
அலர் சோகம் செய்கமலத் தாம."

நெல்லும் செம்பும் உள்ள அன்றே நெல்லின் கண் உமியும், செம்பின் கண் களிம்பும் உளவாயின; இடையே ஒருகாலத்தில் அவை வந்து

பொருந்தின அல்ல. மாயையும் ஆணவ கன்மங்களும் உயிர்கள் உள்ள அன்றே உள்ளன; இடையே வந்தன அல்ல. அவ்வாறாயின் 'மாயை கன்மங்களை இறைவன் உயிர்களுக்குக் கூட்டுவிப்பன்' என்றது எது கருதி என்ற தடை வினாவாக எழுகின்றது. பகலவனால் தாமரை புதிதாகத் தோற்றுவிக்கப்படாது, இயல்பாக உள்ள தாமரை மலர்தலும் வாடுதலுமே பகலவனால் செய்யப்படுமாறு போல, மும்மலங்களும் தத்தம் காரியங்களை நிகழ்த்துதல் இறைவனாலே என்பது கருத்து. மெய்கண்டாரின் இக்கருத்து உமாபதிதேவநாயனாராலும், அவர்க்கு முந்திய அருணந்தி தேவநாயனாராலும் இனிது விளக்கப் பெறுகின்றது.

"அல்லல்மிகு உயிர்க்கிவைதான் அனைத்த தீசன்
அருவினைகள் அருந்துதற்கோ வினையோ அன்றிச்
சொல்லிவரு மாயையோ அணுவை முந்தச்
சூழ்ந்ததெனும் உரைமுதலோர் தொடக்கிலார்பால்,
ஒல்லைவரு மெனின் உளதாம் ; உயிர் உண்டாவே
உளதுமலம் ; மலம் உளதா ஒழிந்த வெல்லாம்
நெல்லின்வரு தவிடுமி போல் அனாதியாக
நிறுத்திடுவர் இதுசைவம் நிகழ்த்துமாறே"

என்கின்றார் உமாபதி தேவநாயனார்.[3] "ஆன்மா என்று உண்டோ அன்றே ஆணவமலம் உண்டு; (ஆனால் மாயையும் கன்மமும் பின்பு உளவானவோ எனில்) ஆணவ மலம் உண்டாகவே ஒழிந்த மாயையும் கன்மமும். நெல்லிடத்து உண்டான தவிடும் உமியும் அந்நெல்லிற்கு அநாதி சம்பந்தம் ஆனாற்போல அநாதியாகச் சொல்வர்; இது சிவாகமங்கள் சொல்லும் முறைமை" என்று உரை காண்கின்றார் சிதம்பரநாத முனிவர்[4] வினை அநாதி என இரண்டாம் நூற்பாவில் விளக்கப் போந்த மெய்கண்டார், ஏனைய ஆணவ மாயைகளின் தொன்மைகளையும் இனப் பற்றி விளக்குவர் என்பது குறிப்பிடத் தக்கது.

ஆணவ மலத்தைச் 'சகசமலம்' எனவும், ஏனைய இரண்டும் 'ஆகந்துக மலம்' எனவும் கூறுவர். ஆகந்துகம் — செயற்கை.

'கன்மம்' 'மாயை' என்பவற்றிற்கு முதலாய் நிற்றலால், 'ஆணவம்' 'மூலமலம்' உயிர் ஆணவத்தோடு மட்டும் இருக்கும் பொழுது அறிவு சிறிதும் இன்றி மூடமாயே கிடக்கும் என்பர்; இது 'கேவலாவத்தை' எனப்பெறும். உயிர், மாயை கன்மங்களோடு கூடி நிற்கும் நிலை 'சகலாவத்தை' எனப்படும். அந்நிலையில் உயிர்க்கு அறிவு சிறிதாக நிகழும்.

கருவிகள் தொழிற்படும்பொழுது உயிர்க்கு அறிவு நிகழும் அவை தொழிற்படாத பொழுது அறிவு நிகழாது. ஆதலால், மாயை அறிவை விளக்குவதன்றி அறிவை மறைப்பதாகாமை தெளிவு.

''புகலும் மலம் ஒழிதற்குக் கலாதி முதல் மாயை
பொருந்தியிடும் அரனருளாற் போதம் தீபம்
சகலமெலாம் உடனாய வாறு போலும்
தரும் அருளை மலம் உயிர்கள் சாராமல் மறைக்கும்
இகலிவரும் இவை யுணரின் இருள்வெளியாம் தன்மை
எய்தும்வகை தன் செய்தி இலங்கும்.

என்பது உமாபதி தேவ நாயனார் தெளிவுரை. 5. ''இது தகச மலம் நீங்குதற்கு ஆகந்துக மலம் வேண்டும் என்பதூஉம் சகலாவத்தை நிகழ்தற்குச் சுத்தமாயையிற் றோன்றிய வாக்கு நாலில், சூக்குமை வாக்கு மூலாதாரத்தைப் பொருந்திய விந்துவினின்றும் தோன்றும் என்பதூஉம் உணர்த்திற்று'' என்று கூறுவர் சிதம்பரநாத முனிவர் 6.

அஞ்ஞானமாவது ஆணவ மலமே என்பதே உமாபதிதேவ நாயனாரின் கொள்கை என்று கூறலாம். சைவாகமங்களில் அதன் இயல்பு பலவாறாக உரைக்கப் பெறும்.

ஆணவ மலத்தின் பரியாய நாமங்களாகச் சிதம்பரநாத முனிவர் உரையின் காட்டப்பெறுவன பின்வருவன : பசுத்துவம், பசுநீகாரம், மிருத்தியு, மூர்ச்சை, மலம், அஞ்ஞானம், அவித்தை, ஆவிருதி, ருக்கு, கிலாணிபாவம், மூலம், க்ஷயம், பாசம், அசுத்தி, பெந்தனம், வியாகாதம், களங்கம், மோகம், கேவலம், ஆவரணம், தமசு, சடம், படலம், நிரோதம், ஆச்சாதனம். ''அநாதியிலே ஆன்மாக்களை அணுத்தன்மைப் படுத்தி நிற்கையால் ஆணவம் எனப் பெயர் ஆயிற்று'' என்பர் சிதம்பரநாத முனிவர்7.

பாச இலக்கணமாகச் சிவப்பிரகாசத்து உமாபதி தேவநாயனார் உரைப்பது வருமாறு ;8 ஒன்றாய் இருப்பதாய், தத்தம் பரிபாகமான காலவரையறைகளிலே திரும்பத் தகாத அளவிறந்த சக்திகளை உடையதாய், 'இருளும் ஒளி' எனனும்படி இருண்டமயக்கத்தை உடையதாய், செம்பிற் பொருந்திய களிம்பு போன்று, அழியாத பிரதான மலமாய், ஆன்மாக்களுடைய இச்சா ஞானக் கிரியைகள் அடங்கலையும் மறையா நிற்கும் ; இனித் திரோதான சத்தியானது, ஆன்மாக்களோடு நின்று, அந்த ஆணவமலம் பக்குவம் ஆம்படி

அது மறைத்தற்கு அநுகூலம் செய்தலால், மலம் என்றும் கூறுவர் ; அங்ஙனம் மறைத்தற்கு அநுகூலமான சத்திதானே, சிவனுடைய திருவடிகளை ஆன்மாக்கள் சேரும்படிப் பெரிதும் பரிந்து இரக்கமாய் மகிழும்''.

''ஏகமாய்த் தங்காத எல்லைகளின் மீளும்
எண்ணரிய சத்தியதாய் இருள்ஒளிர இருண்ட
போகமாய்ச் செம்பினுறு களிம்பேய்ந்து நித்த
மூலமலமாய் அறிவு முழுதினையும் மறைக்கும்
பாகமாம் வகைநின்று திரோதான சத்தி
பண்ணுதலால் மலமெனவும் பகர்வர் ; அது பரிந்து
நாகமா நதிமதியம் பொதிசடையான் அடிகள்
நணுகும்வகை கருணைமிக நயக்கும் தானே''

மலங்களின் பெயரும், தொகையும், அவை நீங்கியன்றி முத்தி வாய்க்காது என்பதும் உணர்த்தும் உமாபதி தேவநாயனாரின் திருவிருத்தம் அவரது தனைக் கொள்கைகளின், முடிவுகளைத் திரட்டித் தருதலால், அதனை மறவாது போற்றுதல் வேண்டும். பின்வருவது அத்திருவிருத்தம் [9].

''மோகமிக உயிர்கள்தொறும் உடனாய் நிற்கும்
மூல ஆணவம் ஒன்று ; முயங்கி நின்று
பாகமிக உதவுதிரோ தாயி ஒன்று ;
பகர்மாயை ஒன்று ; படர் கன்மம் ஒன்று ;
தேகமுறு கரணமொடு புவன போகச்
செயலாரும் மாமாயைத் திரட்சி ஒன்றென்று
ஆக, மலம் ஐந்தென்பர், ஐந்தும் மாறாது
அருள் என்பது அரிது என்பர் அறிந்துள்ளோரே''

'இவ்வைந்து மலமும் (பாசமும்) ஒழியாமல் அருள் பெறுதல் கூடாது' என்பது நாயனார் திண்ணிய முடிவு

### 3. ஆய்வின் படிநிலைகள், முடிவுகள் ;

ஐவகைப் பாசங்களுள் மூலமலத்தின் தன்மை, திரோதான சத்தியின் தன்மை ; சுத்தமாயை, அதனின்றும் தோன்றிய சுத்த தத்துவம் ஐந்து ; வாக்குகள் நான்கு ; அசுத்தமாயை ; சிவாத்துவைதமாயா வாதிகளை மறுத்து மாயை உண்டு என்பது ; உலகாயதன் முதலியோரை மறுத்துக் கர்த்தா கன்மத்துக்கு ஈடாக மாயையை வியத்திப் படுத்துவர் என்பது ; கன்மமோ சரீரமோ

முந்தியது என்பது ; அதோ மாயா சிருட்டி ; அதோமாயா சிருட்டி இருவித மாயா சிருட்டிகளான கருவிகள் ஒடுக்கம் ; கன்மமலத்தின் பொதுத் தன்மை; உடல்தோறும் நின்று அக்கன்மமலம் காரியப்படும் முறைமை ; கன்மம் புண்ணிய பாவமாய்ப் பொருந்துவது ; என்று ஒன்றன் பின் ஒன்றாகத் தம் கொள்கைகளை விளக்கி முடிவு போக்கியுள்ள திறம் சிவப்பிரகாசத்திற் காணப் பெறுகின்றது.[10] பல படிநிலைகளாக ஆய்வு விளங்கித் தோன்றி, இறுதியில் முடிவினை வெளிப்படுத்தல் ஆய்வுநெறி முறை. இவ்வாறு தாமே தமக்கொரு ஆய்வு முறை (Individual Research Method) யை வகுத்துக் கொண்டு முடிவு காணும் திறம் இந்நாயனாரிடம் இயல்பாகவே அமைந்துள்ளது.

## 4. திருவருட்பயன் தெளிவுரைப் பகுதிகள் :

அறியாமையைச் செய்கின்ற மாசினது இயல்பை 'இருள் மலநிலை' என்று அதிகாரமிட்டுத் திருவருட்பயனில் நாயனார் விளக்குகின்றனர்[11]. ஆணவம் ஒன்றே இருள்மலம். எனவே இவ்வதிகாரப் பெயர் பெரும்பாண்மை பற்றி வந்தது என்று கூறலாம். ஒன்பது குறள்களும் 'ஆணவம்' பற்றியே பேச, இறுதி ஒரு குறள் மட்டுமே, 'கன்ம மாயைகளது' இயல்பு கூறுகின்றது. ஆதலின் உமாபதிதேவ நாயனார் ஆணவத்தை மட்டுமே விரிவாக ஆராயும் போக்கை இந்நூலில் பின் பற்றுகின்றனர்,

'தொன்றுதொட்டு ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்து வருகின்ற பிறவியால் வரும் துன்பமும், அத்துன்பம் நீங்கப் பெறுகின்ற அழிவிலா வீட்டின்பமும், இவ்விரண்டிற்கும் முதனிலைகளாய் உள்ள பொருள்களும் இல்லை என்றற்கு எந்த அளவையும் இல்லை' என்று முதற்குறளில் நாயனார் நவிலுவதால், இருள் மலத்தின் உண்மையை நிலைநாட்டிப் புகுகின்றார்[12]. 'உயிர்கள் அவ்வாறு கருதிநிற்றற்குக் காரணம் இருத்தல் வேண்டும் ; அதுவே இருள்மலமாம் என்று குறிப்பெச்சத்தால் மகாவித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார் வருவித்துரைப்பது பொருத்தமாக உள்ளது.

'காணப்பட்ட பொருள் யாவும் தானேயாய்த் தோன்றி அவற்றுள் ஒன்றையும் காணவொட்டாது கண்ணொளியை மறைத்து நிற்கும் பொருள் இருள் எனப்படுகின்ற ஒன்றையின்றி வேறில்லை' என்பது அடுத்து வழங்கும் ஆய்வுரை[13]. 'கண்ணை மறைக்கின்ற புற இருள்போல ஆணவமலம் உயிரின் அறிவை மறைக்கின்ற அக இருள்' என்று இதனால் தெளிவாக்குகின்றார்.

'புற இருளானது பிற பொருள்களுள் ஒன்றைத்தானும் காணவொட்டாது கண்ணொளியை மறைத்து நிற்குமாயினும், தான் உளதாதலை உரைநிற்கும் அக இருளாகிய இந்த ஆணவ மலமோ 'பிற பொருள்' 'தான்' என்ற இரு பொருள்களையும் அறிய வொண்ணாத வகையில் உயிரறிவை மறைத்து நிற்கும்' என்பது மூன்றாம் குறளின் முடிவு[14]. 'இதனால் இவ்விருளிலும் மிகக் கொடியது ஆணவம் என்று கூறப்பட்டது' என்பர் நிரம்ப அழகிய தேசிகர்,[15]

''தருக்க மதத்தவர் 'இருளை' உண்மைப்பொருள்' என்னாது, 'ஒளியினது இன்மையே' என்பர். எனினும் ஒளி முக்குணங்களுள் சாத்துவிகத்தின் கூறாகிய உண்மைப் பொருளாதல் போல, ஒளியின் மறுதலைப் பொருளாகிய இருளும் தாமதத்தின் கூறாய் உண்மைப் பொருளேயாம் என்பதே சைவசித்தாந்தத்தின் கொள்கை என்பது மகாவித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார் குறிப்பு[16].

'இருளாகிய ஆணவ மலம், உயிரின்கண் இரண்டறக்கலந்து நிற்கின்ற அக ஒளியாகிய பதிப்பொருளோடே தானும் அன்றே இரண்டறக்கலந்து, அவ்விரண்டிற்கும் கீழ்ப்பட்டதாய், இதுகாறும் நீங்காமலே நின்றது' என்பது நாயனாரின் நான்காம் குறட்கருத்து[17] இதில் கூறப்படும் செய்திகள் பின்வருமாறு :

(1) 'அன்றே' என்றதனால், பதி என்று உண்டோ அன்றே பசுவும் உண்டு என்பதும், அவை இரண்டும் உள்ள அன்றே பாசமும் எண்டு என்பதும் பெறப்படும். (2) 'அளவி' என்றதனால் அம்முப்பொருளும் வேறு வேறாய் நில்லாது, ஒன்றாக் கலந்தே உள்ளன என்பது பெறப்படும் (3) 'அடங்கி' என்றதனால் 'மூன்றும் ஒன்றாகக் கலந்து நிற்பினும் அவை தம்முட்சமமாகாது பதியில் பசுவும், பசுவிற் பாசமும் அடங்கி நிற்பன என்பதும்உணரப் படும். (4) பாசம் — பருப்பொருள் (தூலம்) ; பசு நுண்பொருள் (சூக்குமம்) ; பதி—தனி நுண்பொருள் (அதி சூக்குமம்). (5) ''தன் கடல் நீர் உப்புப்போல்'' என்ற மெய்கண்டார் கொள்கை ஒப்பிட்டுணரத் தக்கது. (6) ஏனை மாயை கன்மங்கள் போல விட்டு விட்டுப் பற்றாது இடையறாது பற்றி நிற்கின்றது என்பது 'நின்றது' என்றதனாற் பெறப்படுகின்றது.

'அக இருளாகிய ஆணவம் என்ற பெண்ணிற்கு, அவன் பலலாக் கூடியிருப்பினும், எஞ்ஞான்றும் தன்தலைவனுக்கும் தன் உருவைக் காட்டாத கற்புநிலை உளதாகின்றது' என்பது

நாயனாரின் அடுத்த செய்தி [18]. 'ஆணவம் பொருளால் ஒன்றேயாய், அளவற்ற சக்திகளால் எல்லா ஆன்மாக்களையும் மறைத்து, இறைவன் முன் தோன்றாமல் நின்று, அங்ஙனம் மறைக்கப்பட்ட ஆன்மாக்களை ஒவ்வொரு கால எல்லையில் விட்டு நீங்கும்' என்பர் திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள். ('கணவற்கும்' என்பது சிந்தனை உரையாசிரியர், சி. அருணைவடிவேலு முதலியார் கொண்ட பாடம்; 'கணவர்க்கும்' என்பது — நிரம்ப அழகிய தேசிகர், திரு. க. வச்சிரவேலு முதலியார் கொண்ட பாடம்) 'இருட்பாவை மருவும் உரிமை சிறிதும்' இல்லாத கடவுளை அவளுக்குக் கணவன் என்றலும், அவளையே வேறு பலரும் புணரும் ஒழுக்கமில்லாத இல்லாள் என்றலும், கணவனுக்கு என்னும் புலனாகாமையே அவளது சீரிய கற்பு என்றலும் தீச்சொற்பொருள் பயக்கும் அவசித்தாந்தமாதல் அறிக' என்பர் க. வச்சிரவேலு முதலியார். மேலும், 'இறைவனுக்கும் மூல்மலம் என்றும் புலனாகாது எனின் அவன் மலத்தால் துயருறும் உயிர்களுக்கு இரங்கி அருள்புரிதல் எவ்வாறு' எனவும் அவர் வினவி. ''கணவர்க்கும்'' என்ற பாடமே சிறந்ததென்று முடிப்பர் [19]

'ஆணவம் ஆன்மாவுடன் வேறறக் கலந்து நிற்பினும், என்றும் அவ்வாறே நில்லாது ஒரு காலத்தில் நீங்குதலின், அவைகட்கு 'உரிய இல்லாள்' என்னாது, 'ஒழுக்கம் இல்லாத இல்லாள் ஆகவும்; பசு பாசங்கள் அனைத்தையும் அடிமையாகவும் உடைமை யாகவும் உடையவன் இறைவனே ஆதலின் அவனை அவட்குக் கணவனாகவும், அவன்முன் ஆணவம் ஒளிமுன் இருள் போலு மாதலின் அவனுக்கும் அஃது என்றும் புலனாகாமையைச் சீரியதொரு கற்பாகவும் உருவகித்தார்' என்று, 'கணவற்கும்' என்ற பாடமே சிறந்ததாதலை ஆய்ந்து முடிப்பர் திரு. சி. அருணை வடிவேலு முதலியார் அவர்கள்.[20]

''ஆணவமலத்தின் உண்மை பற்றிப் பல தடைவிடை மொழிகள் எதற்கு; முன்னை அதிகாரத்தில், 'உயிர் உணரும் தன்மைத்து' என விளக்கப்பட்டதற்கு மாறாக, அதற்கு அத்தன்மை தோன்றாதநிலை 'அஃஇருள்' எனப்பட்ட ஆணவமாகிய அம்மையாரால் தரப்பட்டதே' - என்பர் அடுத்த குறட்பாவில், [21] 'இருளார்' என்பது இழித்தற்கண் வந்தது என்பர் திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள். திரு. க. வச்சிரவேலு முதலியார் இருவரும் நிரம்ப அழகிய தேசிகர், 'செறலின் கண் வந்த அஃறிணை வழுவமைதி' என்பர் 22,

அக இருளாகிய ஆணவமலம் இல்லையாயின் ஆன்மாக்களுக்குத் துன்பம் உண்டாதற்குக் காரணம் யாது? துன்பம் உயிரிடத்து உள்ள ஒரு பண்பல்லது அதனின் வேறாய தனிப்பொருள் ஒன்று அன்று எனின், துன்பம் அதற்கு மாறாய பிறபொருள்களால் நீங்கவும் காண்கின்றோம்; ஆதலின் துன்பத்திற்கு மருந்தாய் அதனை நீக்கும் பொருளும் உண்டு என்பது பெறப்படுகின்றது. துன்பமும் உயிரின் இயல்பே ஆயின் துன்பம் இல்லையாகின்ற காலத்தில், ஆன்மாவும் அதனை இல்லையாய் ஒழியும்'' என்பது நாயனாரின் அடுத்த ஆய்வுரை [23].

''இருள் மலமே எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணம். அஃது உயிரின் செயற்கையே; இயற்கைக் குணம் அன்று'' என்பது இதனால் தெளிவாக்கப்படுகின்றது.

"ஆணவ மலம் அனாதியாய் இல்லாமல் ஆதியாய் இடையே ஒரு காலத்தது எனின், அவ்வாறு வந்து பற்றுதற்குக் காரணம் யாது? காரணம் இன்றியே வந்து உயிர் வீடுபெற்ற நிலையிலும் அவ்வாணவத் தடை, காரணமின்றியே வந்தது என்பர் நாயனார். அடுத்து, 'அங்ஙனம் கூறுதல் கூடாமையாய், ஆணவத்தை ஆதி எனல் பொருந்தாது; அனாதியேயாம்' என்பது கருத்து.

உயிர்களின் பக்குவ முதிர்ச்சி காரணமாக ஆணவம் அவைகளை விட்டு நீங்குவதாகும் என்பர் அடுத்து.[24]

'உயிர்களுக்கு உடம்பு முதலியன அவைகளது வினைக்கு ஏற்ப மாயையினின்றும் தோன்றி, ஆணவ இருள் விடியும் வரையும், இருளில் உள்ளவனுக்கு விளக்குப் போல உதவுவனவாம்'' என்று முடிப்பர். பத்தாவது குறளில், 'மலமும் மாயையும் இருளும் ஒளியும் போலத் தம்முண் மாறுடைய'' என்பர் நிரம்ப அழகிய தேசிகர்[25]. பிற மதங்கள் உலகத்தை அல்லது மாயையை உயிர்கட்குத் தீங்கு செய்யும் பொருளாகக் கூறும்; சைவசித்தாந்தம் ஒன்றே அதனை உயிர்கட்கு நன்மை செய்யும் பொருளாகக் கூறுதல் உணரத்தக்கது.

திருவருட்பயனின், 'இருள்மலநிலை' என்ற அதிகாரம் இவ்வாறு நாயனாரின் தளைக்கொள்கை விளக்கமாக விளங்குதல் அறியத்தக்கது.

## 5. நெஞ்சுவிடு தூது:

நெஞ்சுவிடு தூதில் வரும் தளையின் இயல்பு, பொதுநிலைக்கண் கூறப்பட்டதேயன்றி,[26] 'சிவப்பிரகாசம்' 'திருவருட்பயன்'

ஆகியவற்றில் உணர்த்தப்பட்டது போன்று ஆய்வு முறையில் கூறப்படவில்லை என்பது கூர்ந்துணரத் தக்கது.

## அடிக்குறிப்புகள்.

1. 'சிவப்பிரகாசம்' — திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பு (1953) ; (இலக்கணம் சிதம்பரநாத முனிவர் செய்த உரையுடன் கூடிய த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் பதிப்பு)
   'மெய்கண்ட சாத்திரம்' — தருமையாதீனப் பதிப்பு (1956) (முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் ஆராய்ந்த மூலப்பதிப்பு)
   'திருவருட்பயன் (— திருமையாதீனப் பதிப்பு ( 974) (சி. அருணைவடிவேலு முதலியார் விளக்கவுரையுடன் கூடிய பதிப்பு)
   'திருவருட்பயன்' — திருவாடுதுறையாதீனப் பதிப்பு (1976) (க வச்சிரவேலு முதலியார் திரம்ப அழகிய தேசிகர் உரையுடன் குறிப்புக்கள் எழுதிய பதிப்பு)
   'சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்' — தருமையாதீனப் பதிப்பு (1984) (சி. அருணைவடிவேலு முதலியார் எழுதிய ஆய்வுப் பதிப்பு) — ஆகியவை இக்கட்டுரை எழுதப் பயன் படுத்தப் பெற்ற பதிப்புகள்.
2. மெய்கண்ட சாத்திரம் — மேற்படிப் பதிப்பு பக்கம் 35
3. மெய்கண்ட சாத்திரம் — மேற்படிப் பதிப்பு பக்கம் 253.
4. சிவப்பிரகாசம், மேற்படிப் பதிப்பு, பக்கங்கள், 50-51
5. மேற்படி நூல், பக்கம் 69
6. மேற்படி நூல், பக்கம் 69.
7. மேற்படி நூல், பக்கம் 40.
8. மேற்படி நூல், பக்கம் 37.
9. மேற்படி நூல், பக்கம் 62.
10. சிவப்பிரகாசம், இரண்டாம் சூத்திரம் பாட-2 முதல் 31 வரை
11. திருவருட்பயன், தருமையாதீனப் பதிப்பு, பக்கம் 54 முதல் 6 வரை
12. மேற்படி நூல் - பக்கம் 54.
13. திருவருட்பயன் - பக்கம் 55.
14. மேற்படி நூல் - பக்கங்கள் 56 - 57.
15. திருவருட்பயன் - திருவாவடுதுறையாதீனப் பதிப்பு, பக்கம் 33.
16. திருவருட்பயன், தருமையாதீனப் பதிப்பு, பக்கங்கள் 58 - 59
17. மேற்படி நூல், பக்கங்கள் 60 - 62.

18. மேற்படி நூல், பக்கங்கள் 61 - 62.
19. திருவருட்பயன், திருவாவடுதுறையாதீனப் பதிப்பு, பக்கம் 37.
20. திருவருட்பயன், தருமையாதீனப் பதிப்பு 61—62.
21. மேற்படி நூல், பக்கம் 63.
22. திருவருட்பயன், திருவாவடுதுறையாதீனப் பதிப்பு, பக்கம் 38.
23. மேற்படி நூல், பக்கம் 38.
24. மேற்படி நூல், பக்கம் 40.
25. மேற்படி நூல், பக்கம் 42.
26. மெய்கண்ட சாத்திரம், பக்கங்கள் 30 , 303.

---

## வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4 6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்துத் தருதல் வேண்டும். மிக நெடிய கட்டுரைகளை அனுப்ப வேண்டாம். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப் பெறும் இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப் படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

# முள்ளிக்குளம் "பேய்ப்படைக்கு வாள் வழங்கு கொற்றத்தாள்" கோயில் ஆராய்ச்சிக் குறிப்பு

பேராசிரியர் சி. கோவிந்தராசனார்,
தமிழியல்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

சங்காத்தம்மன் என்று கூறப்பெறும் இக்கொற்றவைக் கோயில், குளம் என்று தென்பாண்டி நாட்டாரால் கூறப்பெறும், முள்ளிக்குளம் என்னும் ஏரியுடன் கூடிய சிற்றூரின் தென்பால் ஏரியின் நடுவிடத்தே அமைந்ததாகும்.

அழகிய சிற்ப அடிப்படையுடன் வலிமை நிறைந்த நிலையில் கற்றளியாக எழுப்பப்பட்டிருந்த இக்கோயில் இன்று முழுவதும் இடிந்து நாற்புறமும் சரிந்து கற்குவியலாகக் கிடக்கின்றது.

இவ்விடிபாட்டுத் தொகுதியினைச் சூழ்ந்து புதரும் புற்றும் வெளியுமாக இருப்பதால் நச்சுப்பாம்புகளின் உறைவிடமாக இருப்பதனைச் சுவடுகளால் அறிய முடிந்தது.

ஏறத்தாழ, 28 - அடி நீளம், 12 - அடி அகலம், 16 - அடி உயரம் என்ற அளவுகளில், முகமண்டபம் கருவறை என்ற இரண்டு அங்கங்களுடன் இக்கோயில் அமைக்கப்பட்டிருததனை எஞ்சி நிற்கும் பகுதிகளால் கணித்தறியலாகும்.

வடக்குநோக்கிய பாங்கில் அமைக்கப்பட்ட இக்கோயில் கல்லிடு மண்டப அமைப்பாகவே விமானமின்றி இருந்துளது என்பதனைச் சிதைவுகளினிடையிடையே சிக்கித் தலைக்காட்டும் செங்கற்பாறைப் படலங்களால் அடுய முடிகின்றது.

கற்றளி சிதைந்ததாயினும் அடிப்படையின் மேற்றளத்தில் கருவறைப்பகுதியில் எழுந்தருளப் பெற்ற சங்காத்தம்மன் திருவுருவம் எத்தகைய குறையும் பெறாது இருப்பது தெய்வீகத்தின் சிறப்பேயாகும்.

தீக்கதிர் முடியுடன் எட்டுக்கைகளுடன் வலதுகாலை இருக்கையில் குத்திட்டூன்றிய பாங்கில், இடது காலை, கீழே வீழ்ந்துகிடக்கும் வீரனின் மார்பில் ஊன்றிய நிலையில் சிற்பத்திருமேனியின் தோற்றம் அமைக்கப்பட்டுள்ளது.

வலது மேற்கையில் பிடித்த திரிசூலமும், பிற கைகளில் வில், வாள், கேடயம், பாசம், மழு ஆகிய படைக்கலங்களும் திகழ்கின்றன. சிலையின் பொதுத் தோற்றம் அச்சத்திற்குரியதாக அமையினும், அன்னையின் திருமுகம் கொடுமையின்றிக் கருணை பெருகும் தோற்றமாகவே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கோயிலின் அடிப்படை வரிசைக்கற்களில் கி. பி. 1250-ல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு இருப்பதைக் கொண்டு, இக்கற்றளி, கல்வெட்டு பொறிப்பதற்கு முன்னர், கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்டிருக்க வேண்டுமென்பதனை, அடிப்படையிலிருந்து எழுப்பப்பட்டுள்ள சிற்பவரிசை அடுக்குநுட்ப வேலைப்பாடு களினால் அறிய முடிகின்றது. இக்கற்றளி ஏரிக்கு நடுவிடத்தே இடம் பெற்றிருப்பதால் மாரிக்காலத்தில் நீர்சூழ்ந்து கட்டடக் கோப்பு நெகிழ்ந்து சலகலத்து நின்றநிலையில் முகமண்டபத்தின் நடுத் தளத்தில் தோன்றி வளர்ந்து வேப்பமரத்தின் வேர்ப்பெருக்கத்தி னாலும், கோயிலின் இருப்புச் சுவர்களின் அடியில் தோன்றி வளர்ந்துள்ள மாவுலிங்கம் நுணா ஆகிய மரங்களின் வேர்களினாலும் நாளுக்கு நாள் சிதைந்து குவித்து கிடக்கின்றது.

கோயிலின் வாயிலுக்கு முன்னர் வேலைப்பாடமைந்த சதுர பீடத்திலிருந்து எழுப்பப்பெற்றதாக, விரிந்த இதழ்களோடமைந்த தாமரைமலர் முகட்டுடன் விளங்கும் தோற்றத்தில் அழகிய சிற்பத் திறனுடன் பலிபீடம் அமைக்கப்பட்டிருந்ததை, நிலைகுலைந்து நெகிழ்ந்து நிற்கும் பகுதிகள் உணர்த்துகின்றன.

## கோயிலின் சிறப்பு

அக்காலத்தில் தென்பாண்டி நாட்டில் இப்பகுதியில் அமைக்கப் பட்டிருந்த படைவீரர்களின் வழிபாட்டிற்குரிய கொற்றவையின் கோயிலாகவே இக்கோயில் இருந்துளது. இதற்குச் சான்றாக முள்ளிக்குளத்தினைச் சார்ந்து கிழக்கே "வீரிருப்பு" வீரி இருப்பு என்னும் ஊரின் பெயரும், ஊரின் வடபுறம் நிற்கும் அரியூர் மலையின் அடிவாரத்தில் ஆங்காங்கேயுள்ள பழைய கிராமதெய்வக் கோட்டங்களும் பாறைக் கல்வெட்டுச் செய்தியும் அரண் செய்கின்றன. "பேய்ப்படைக்குவாள் வழங்கு கொற்றத்தாள்' என்று இவ்வம்மையின் பழம்பெயர் கல்லெழுத்துக்களால் அறியப் பெறுவதும் ஈண்டு அறியத்தகுந்ததாகும்.

## பெயர்க்காரணம் :

தென்பாண்டி நாட்டினை ஆண்ட பாண்டியர் தமது ஆட்சிக்கும், வெற்றிக்கும் தெய்வமாக விளங்குவது இக் கொற்றவையே என்னும் நம்பிக்கையினாலேயே "கொற்றத்தாள்" என்று இவ்வம்மைக்குப் பெயரிட்டுள்ளனர் எனலாம்.

## பேய்ப்படை

பாண்டியன் படைகளுள் வாள்வீரர் படையே சிறந்ததாகும்.

இப்படைவீரர்கள், பகைவரின் வலிய படைக்கோப்பணியின் மீது அஞ்சாது புலியெனப்பாய்ந்து ஊடுருவிச் சென்று பகைவீரரை வெட்டியும் குத்தியும் அழித்து வெற்றிகாணும் ஆற்றலுடைய ராதலின் அவர்களின் கொடிய செயலைக்குறிக்கும் பெயராகவே "பேய்ப்படை" என்று பெயர்பெற்றுள்ளமை அறியத்தக்கதாகும்.

## வல்வழங்கு கொற்றத்தாள்

பகைவரைத் தாக்கப் படையெழும்போது, வீரர்கட்குப் பெருஞ் சோறு படைத்து, வாழ்த்தி வாள் வழங்குவது மன்னனின் மரபுச் செயலாகும். அவ்வீரச் செயலைக் கொற்றவை வழியே பெற்றதால், கொற்றவை, "வாள் வழங்குகொற்றத் தாள்" என்னும் சிறப்புப் பெயர் பெற்றுள்ளமை அறியத் தகுவதாகும்.

## வீரவாள் வழங்குவிழா

போர் ஏற்பட்ட காலத்தில் பேய்ப்படைத் தலைவன் வீரருடன் இக்கொற்றவைக்கு வீரவிழா செய்து பலிகள் பல இட்டு வெற்றி வேண்டித் திருமுற்றத்தில் நிற்க, அதுபோது அரசன் வழி அளிக்கப் பட்ட சிறந்த வாளினை, அம்மையின் கையில் சார்த்தி, படைய விட்டு வழிபாடு நிகழ்த்திய வெறியாட்டாளனாகிய பூசாரி ஆவேசமுடன் அவ்வாளினை எடுத்து வந்து அம்மையின் வாக்கென வெற்றிவாக்குக் கூறிப் படைத்தலைவனின் கையில் கொடுத்துப் போர்க்களத்துக்கு அனுப்பும் நிகழ்ச்சியினாலேயே, இக்கொற்றவைக்கு வாள் வழங்கு கொற்றத்தாள் என்னும் சிறப்புப் பெயர் அமைந்துள்ளது என்பது கருதியறியத்தக்கதாகும். (சூரனை அழிக்கப் படைத்தலைமைபூண்ட முருகனுக்குப் பராசக்தி யாகிய உமாதேவி வெற்றிவேல் வழங்கும் சூரசம்மார விழா திருக்கோயில்களில் இன்றும் நிகழ்வதனை ஈண்டு ஒப்பிட்டறியத் தகும்) ஆவேசமுடன் பூசாரி அளித்தவாளினைக் கைக்கொண்டு வெறியுணர்வுடன் தமது படையைக் கொற்றத்தாளின் கூளிப்படை யென நடத்திச் சென்று பகைவரை அழித்து வெற்றிகாணும் படையென்பதாலும் பேய்ப்படை (களிப்படை) என்று பெயர் பெற்றது எனலாம்.

## சிதைந்து புதைந்த சிவன் கோயில்

சங்காத்தம்மன் கோயிலுக்கு நேர் மேற்கே, அரை கிலோ மீட்டர் தொலைவில் நெடுஞ்சாலைக்குத் தென்புறமும் கண்மாய்க்குக் கீழ்ப்புறமுமான நிலம் புதரடைந்து மேடாகக் காணப்படுவதனைக் கண்டு அம்மேட்டினை ஆராய்ச்சி செய்யலானேன்.

அங்கு செம்மையுடன் இருந்த கோயிலொன்று இயற்கையினால் அழிந்தோ அல்லது அழிக்கப்பட்டோ புதையுண்டு மண்மேடாகப் புதரடைந்து கிடக்கின்றது. பன்னிரண்டடி உயரமாக நிற்கும் வாயில் நிலைக்கல்லொன்றும், அதற்கு முன்னர் புதரில் வலதுகால் சிதைந்ததாகக் கிடக்கும் துவாரபாலகர் சிலையொன்றும் அக் கோயிலின் வரலாற்றினைத் துன்பமுடன் அறிவிக்கும் சின்னங் களாகத் தோற்றமளித்தன.

ஐந்தடி உயர் அளவிலுள்ள துவாரபாலரின் சிற்ப அமைப்புடன் வெளித் தோற்றமாகத் தரையிலிருந்து புலப்படும் அடிப்படைப் பகுதிகளையும் கொண்டு சிந்திக்கும் போது, இக்கோயில் சிவன் கோயிலாக கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகின்றது.

கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின்மீது படையெடுத்து வந்து, மதுரையைக் கைப்பற்றி ஆட்சி செய்த முகமதியரின் சமயவெறித்தாக்குதலினாலும் கி. பி. 18 – 19 நூற்றாண்டுகளில் பாண்டிய நாட்டைச் சிதைத்துக் கைப்பற்றிய ஆங்கிலப் படை வெறியர்களாலும் இக்கோயில் அழிக்கப்பட்டிருக்கலாம். அகழ்ந்து கோயிலின் அடிப்படையினைப் புலப்படுத்தின் இக்கோயில் பற்றிய வரலாற்றுண்மைகள் புலனாகும்.

## கொற்றவையின் மற்றொரு கோயில்

இவ்வழிந்த கோயில் பகுதிக்கு வடக்கே சாலையின் தென்பகுதி யில் பிடாரி கோயிலொன்றுளது. கற்றளி மண்டபக் கட்டுக் கோப்பாகக் கருவறை முகமண்டபம் ஆகிய ஆங்கங்களுடன் இருந்த கோயில் கற்கூரையிடிந்த நிலையில் இன்றுளது. இக்கோயிலில் முன்னர் இருந்த கொற்றவையின் சிலை சிதைவு பெற்ற நிலையில் முகமண்டபத்தின் வலப்புறம் இடம்பெறச், கருவறையில் புதியதொரு சிலை அதே வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. பழைய சிலையின் தோற்றம் சங்காத்தம்மனின் உருவினை ஒத்த அளவில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதைப்போன்றே வீரிஇருப்பிலுள்ள கொற்றவைச் சிலையும் அமைந்திருப்பதால் சங்காத்தம்மனின் சிலையைப்போன்றே அதன் பிரதியாக ஆங்காங்கே உள்ள ஊர்களில் சிலை நிறுவப்பட்டு மக்கள் வழிபட்டு வந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.

## வீரிஇருப்பு–திருவாய் மொழி அம்மை

வீரிஇருப்பின் வடபாலுள்ள அம்மன் கோயிலில் எழுந்தருளி யுள்ள கொற்றவையின் திருவுருவம் சங்காததம்மனின் திருவுருவைப்

போன்றதேயாகும். அம்மனின் பெயர் "திருவாய் மொழி அம்மை" என்பதாகும். தூய தமிழ்ப்பெயர் இன்றும் நிலைத்திருப்பதனைக் கொண்டு, வடமொழித்தாக்கம் பெறாத கோயில்கள் தென்பாண்டி நாட்டில் இருப்பதை அறியலாகும்.

## தீப்பாய்ந்த அம்மன் – மாசதிக்கல்

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திலோ, பின்னரோ வீரி இருப்பின் படைத்தலைவனாக விளங்கிய மாவீரன் போரில் விழுப்புண்பட்டு இறந்தபோது, அவனது மனைவி திருவாய் மொழியம்மைத் திருக்கோயிலின் முன்னர் வடக்கு நோக்கிப் படர்ந்துள்ள தடத்தில் தீ வளர்த்து அதில் மங்கலமுடன் பாய்ந்து உடன் தெய்வமாகியுள்ள இடம் இருக்கின்றது. அங்கு தீப்பாய்ந்த பத்தினித் தெய்வத்தின் திருவருளை அவர் கணவன் மாவீரனுடன் அமர்ந்திருக்கும் பாங்கில் பெரும் பாறையில் புடைப்புச் சிற்பமாகச் செய்து (சதிக்கல்) நட்டுள்ளனர். இம்மா சதிக்கல் திருவாய்மொழி அம்மைத் திருக் கோயிலுக்கு முன்னர் நிற்கின்றது. கணவனுடன் தீப்பாய்ந்த வீரமங்கையின் பெயரால் அவ்வூர் 'வீரிஇருப்பு' என்னும் பெயர்பெற்றதாகி இன்று வீரிருப்பு என்று திரிந்துளது.

## முள்ளிக்குளத்து மாலையம்மன்

வீரிஇருப்பில் கணவனுடன் தீப்பாய்ந்து தெய்வமான பத்தினித் தெய்வத்தினைத் தமது ஊரிலும் விழாவெடுத்துப் போற்றத் தொடங்கிய முள்ளிக்குளத்துப் பெருமக்கள், அவ்வம்மைக்கு இடமமைத்து அருவமாக மகுடமெடுத்து விழா நடத்தி வருகின்றனர். மஞ்சளுடையணிந்து மலர்மாலை புனைந்து மங்கலத்துடன் மகளிர் தீப்பாய்ந்து கணவனுடன் தெய்வமாதல் மரபாதலின் அத் தோற்றத்தால் "மாலை அம்மன்" என்றும் தீமூட்டிப் பாய்ந்த செயலால் "தீப்பாய்ந்த அம்மன்" என்றும் பெயரிட்டு மக்கள் வழிபட்டு வருகின்றனர். வீரர்களாலும், மக்களாலும் சிறப்புடன் வழிபாடு செய்யப்பெற்ற மாசதிக்கல் இன்று திருவாய்மொழியம்மையின் திருவாசலுக்கு முன்னர் வறிதாக நிற்கின்றது.

அரியூர் மலையின் அடிவாரத்திலமைந்துள்ள வீரிஇருப்பு, என்று பெயர்பெறும் சிற்றூர் தென்பாண்டி நாட்டின் பழம்பதிகளுள் ஒன்றாக அமைந்து வரலாறு தரும் நல்லிடமாகும்.

## கல்வெட்டு பற்றிய விளக்கம்

| | |
|---|---|
| கல்வெட்டு உள்ள இடம் : | நெல்லை மாவட்டம், முள்ளிக்குளம் (ஊர்) தென்புறம். பேய்க்குளம் என்னும் ஏரியின் நடுவே இடிந்து சரிந்து கிடக்கும் கொற்றவைக் கோயில். |
| எழுத்து : | தமிழ் (12-ஆம் நூற்றாண்டு வரி வடிவம்) |
| அரசன் : | இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி. பி. 1239-1251) |
| மெய்க்கீர்த்தி : | ''ஸ்வஸ்திஸ்ரீ பூமலர்த் திருவும் பொருசயமடந்தையும்'' |
| கல்வெட்டின் காலம் : | ஆட்சியாண்டு - 10 கி. பி 1250 |
| கல்வெட்டுச் செய்தி : | இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் தன் ஆட்சியாண்டு பத்தில் பேய்ப்படைக்கு வாள் வழங்கும் கொற்றத்தாளெனும் பெயர் பெற்ற கொற்றவைக்கு நான்கு மா நிலம் வழங்கி, அந்நிலத்தின் எல்லைகள், நீர்ப்பாசன முறைமை வருவாய் அளவு ஆகியவற்றைத் திட்டப்படுத்தித்தேவதான இறையிலி நிவந்தமாகக் கொடுத்துள்ளான். |
| அரசனைப் பற்றிய வரலாறு : | இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன், பாண்டிய நாட்டாட்சியைக் கி. பி. 1239 – ல் பெற்றானாயினும், ஆற்றலற்ற நிலையிலேயே தென்பாண்டி நாட்டில் தங்கியிருந்துள்ளான். இவனது அரசுக்கு அக்காலத்தில் பாதுகாப்பளித்தவர்கள் கொங்கு சோழனாகிய விக்கிரம சோழனும், போசளமன்னன் வீரசோமசுரனுமேயாவர். போசள மன்னனின் பாதுகாவலே இப் பாண்டியனுக்குச் சிறந்திருந்ததெனலாம். எனவே, மைசூர் பகுதியினராகிய |

போசளரின் குடியேற்றம் இக் காலத்தில் தென்பாண்டி நாட்டில் இடம் பெறலாயிற்று. கன்னட பிராமணரின் பிர்மதேயவாழ்க்கை தென்பாண்டி நாட்டில் மிகுதியாக இடம் பெற்றது. இக்காலத்திலே தான் என்பதனை சேரன்மகாதேவி, அம்பாசமுத்திரம் - பிர்மதேசம், சதுர்வேதி மங்கலம், சிந்தாமணி அகரம் ஆகிய இடங்களில் கன்னட பிராமணர்கள் இன்றும் வழி வழியாக வாழ்வதைக் கொண்டு அறியலாகும்.

இப்பாண்டியன், அக்காலத்தில் சோழநாட்டை ஆட்சி செய்த மூன்றாம் இராசேந்திரனோடுபோர் செய்து தோற்றவனாதலின், தனக்கு வெற்றி வேண்டியே வெற்றிதரும் கொற்றத்தாளாக விளங்கிய முள்ளிக்குளத்து அம்மைக்கு விளை நிலம் நிவந்தம் செய்துள்ளானென்று கருதலாகும்.

---

# "இரட்டைக் காப்பியத்தில் மாதவி"

டாக்டர் ஏ. என். பெருமாள்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-600 113.

## ஆய்வு நோக்கம் :

தமிழன்னையின் அணிகளான சிலம்பிலும் மேகலையிலும் வைர மணியாக மாதவி என்ற பாத்திரம் பதிக்கப்பட்டுள்ளது. இருபெருங் கவிஞர்கள் மாதவியை இருவேறு கோணங்களில் கண்டு களிக்கச் செய்கின்றனர். இளங்கோவின் மாதவியைச் சாத்தனாரும் கையேற்றுக் காப்பியத்துள் உலவச் செய்துள்ளார் என்பதைப் பதிகத்தின் வாயிலாகவும் கதைப் போக்கின் முறையினாலும் அறிய முடியும். மாதவியின் இரு காப்பியத் தொடர் வாழ்வு நெருடின்றிச் சீர்மையாக அமைந்துள்ளதா ஆசிரிய மாறுபட்டாலும் காப்பியங் களின் படைப்பு நோக்க வேறுபாட்டாலும் இந்தப் பாத்திரம் தன் இயல்பான போக்கிலிருந்து விலகி மாறு நடை போடுகின்றதா மாதவியின் பண்பு முன்னுக்குப் பின் முரணாது அமைகின்றதா நிகழ்ச்சிக் கோர்வையில் வேறுபாடு உள்ளதா என்ற வினாக்களை நன்றாக ஆய்ந்துணரும் போக்கில் இப்பாத்திரப் படைப்பின் பல் வேறு கூறுகளைத் தனித்தனியே காண முயலலாம்.

## காப்பியங்களில் பாத்திரத்தின் பங்கு :

மாதவி நடன அரங்கேற்றம் செய்யும் எழில் நிலையில் இளங்கோவால் அறிமுகம் செய்யப்படுகிறாள். அவள் பன்னீராண்டு பருவமுடைய பரத்தையர் குல நங்கை. ஆடல் பாடல் அழகு ஆகியவற்றில் குறைவற்ற சிறப்புடன் விளங்குகிறாள். சிறப்பாக ஆடி அனைவரையும் கவர்ந்ததோடு அரசனிடமிருந்து பட்டமும் பரிசிலும் பெறுகிறாள். அவளுடைய கலைத்திறனுக்கு அடிமையான கோவலன் பரிசில் மாலையைப் பணம் கொடுத்து வாங்கி அவளது ஆசை நாயகன் ஆகிறான். அவனையே தன் நாயகனாகக் கருதுகிறாள் மாதவி.

> 'கலவியும் புலவியும் காதலற் களித்தாங்கு
> ஆர்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக்
>
> கோலங் கொண்ட மாதவி ..........' (4, 43-44).

இன்பம் பொலிய வாழ்கிறாள். மணிமேகலையைப் பெற்றுச் சிறக்கிறாள். இன்ப மயக்கத்தாலும் விதியின் விளையாட்டாலும் கானல் வரி பாடி கோவலனின் மனத்தை நோவச் செய்து

விடுகிறாள். கோவலன் பிரிகிறான். மாதவி வேதனையுற்று வருந்துகிறாள். அவளது இன்ப வாழ்வின் கதவு மூடப்படுகிறது. கோவலனின் சாவைப்பற்றி அறிந்ததும் உலக வாழ்வைத் துறக்கிறாள். மகள் மணிமேகலையைப் போதித் தானம் செய்து துறவியாக்குகிறாள்.

மேகலையில் ஆடரங்கம் ஏற மறுக்கும் நிலையில் மாதவி அறிமுகப் படுத்தப் படுகிறாள். தன் மகள் மணிமேகலையையும் தடுத்துக் கட்டுப்படுத்துகிறாள். இதனை அவளது தாய் சித்திராபதி கடுமையாக எதிர்க்கிறாள். மாதவி அறவண அடிகளைப் பணிந்து அறவுரை கேட்டு பௌத்த சமயம் சார்ந்து விடுகிறாள்.

மணிமேகலையைத் துறவு மேற்கொள்ளச் செய்வதே மாதவியின் முக்கிய நோக்கமாக மேகலை குறிப்பிடுகிறது.

'மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை
அருந்தவப் படுதல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழில் படாஅள்' (2, 55 - 57).

என்று சாத்தனார் கூறுகிறார். எடுத்த எடுப்பிலே 'மாதவி துறவி' (2, 10) என்று கூறினாலும் அவளது துறவு வாழ்வை ஊர் ஒத்துக் கொண்டதாகத் தோன்ற வில்லை.

'கோவலன் இறந்தபின் கொடுந்துய ரெய்தி
மாதவி மாதவர் பள்ளியுள் அடைந்தது
நகுதக் கன்றே நன்னெடும் பேரூர்' (18, 7-9)

என்று குறிப்பிடப்படுகிறது. 'பயங்கெழு மாநகர் அலரெடுத் துரைத்ததைப்' (2, 9) பற்றிச் சற்றும் கவலைப்படாது மாதவி அறவண அடிகளின் அறவுரை கேட்டு 'நற்றவம் புரிந்து' (2, 33) வாழ்கிறாள்.

இரு காப்பியத்துள்ளும் மாதவியின் பங்கைச் சுருக்கடக்கமாகக் கட்டக் காப்புள் அமைத்துக் காணலாம்.




**நடனக் கலைத் திறன் :**

மாதவி நடனக் கலையில் நன்கு பயிற்சி பெற்றுத் தேர்ந்தவள் என்பதை இளங்கோ பல இடங்களில் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

'நாட்டிய நன்னூல் நன்கு கடைபிடித்துக்
காட்டினள் ...... ................ (3, 158 — 159)

என்று கூறி நாட்டிய நன்னூல் வழி முறையாகத் தேறியவள் என்பதை அறிவுறுத்துகிறார்.

'இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து
பல்வகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்
பதினோ ராடலும் பாட்டும் கொட்டும்
விதிமாண் கொள்கையில் விளங்க அறிந்த' (3, 12 — 15)

ஆடல் ஆசிரியரிடம் நன்கு பயின்றவள். உடல் அசைவால் உணர்ச்சிகளை விளங்க வைக்கும் முத்திரைக் குறிப்புகளையே இளங்கோ எங்கும் சுட்டிக் காட்டுகிறார்.

சாத்தனார் மாதவியின் நடனத் திறனை விளக்கும்போது,

'வேத்தியல் பொதுவியல் என்றிரு திறத்துக்
கூத்தும் பாட்டும் தூக்கும் துணிவும்' (2, 18 — 19)

என்று இளங்கோவின் கூற்றுக் கிணங்கச் சொல்வதோடு அமையாமல்,

'வட்டிகை செய்தியும் மலராய்ந்து தொடுத்தலும்
கோலங் கோடலும் கோவையின் கோப்பும்
காலக் கணிதமும் கலைகளில் துணிவும்
நாடக மகளிற்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்
கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை' (2, 27 — 32)

என்று மிகுதியாக விளக்குகிறார். இதிலிருந்து மாதவி நடன முத்திரைத் தேர்ச்சியோடு மலராய்ந்து தொடுத்தல், கோவையின் கோப்பு ஆகியவற்றிலும் திறம் பெற்று விளங்கியதாகத் தெரிகிறது. மேலும் ஓவியச் செந்நூற் செய்திகளைக் கற்றவள் என்றும் அறிய முடிகிறது. இளங்கோ கூறாததைச் சாத்தனார் சுட்டி உரைக்கிறார். மேற்கூறிய தனித்திறமைகள் காலப் போக்கில் நடனக் கலைக்குள் புகுந்தவை என்று கொள்ளலாம். இளங்கோவின் காலத்தில் இல்லாத உத்திகளும் வித்தைகளும் சாத்தனார் காலத்தில் கூடுதலாகக் கலைக்குள் புகுந்துள்ளதை இதன் மூலம் அறியலாம்,

## சோதனையும் வேதனையும் :

சிலப்பின் தொடக்கத்தில் மாதவி ஓர் இன்பவல்லியாகக் காட்சி தருகிறாள். கலைத் திறனால் பேரும் புகழும் பெற்று விளங்குகிறாள். கோவலனின் உறவால் வாழ்வின்பம் கூடிச் சிறக்கிறது. அவளது இன்ப வாழ்வுக்குச் சோதனையாகக் கானல்வரிப் பாடல் அமைகிறது.

'கலவியால் மகிழ்ந்தாள்போல் புலவியால்யாழ்வாங்கிப்' பாடி விடுகிறாள். பாட்டைக் கேட்ட கோவலன் மனம் திரிந்து விடுகிறான்.

'கானல்வரி யான்பாடத் தானொன்றின் மேல்மனம் வைத்து
மானப்பொய் பலகூட்டு மாயாத்தாள் பாடினாளென'க்
(7, 52, 2 — 3)

கருதி மனம் மாறுகிறான்.

'யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினைவந் துருத்ததாகலின்
உலவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை நெகிழ்தனனாய்ப்'
(7, 52, 4 – 5)

பிரிந்து செல்கிறான். அக்கணத்திலிருந்து மாதவியின் வாழ்வு சோதனைக் களமாக மாறுகிறது. ஆடலும் பாடலும் திறம் குன்றுகின்றது. தனிப்படு காம வேதனையால் அழகு தேய்கிறது. ஆடல் மகளே' என்று கோவலன் குன்றவுரைக்கும் அளவுக்கு மாதவியின் நிலை தாழ்ந்து விடுகிறது. அவள் 'பூமலர் அமளி மிசைப் பொருந்தாது' வதிகின்றாள். இன்ப மாதவி துன்ப மாதவி யாக்கப்படுகிறாள். கோசிக மாணியிடம் மாடலனை அனுப்பி மன ஆறுதல் காண முயல்கிறாள். ஆனால் கோவலனின் சாவுச் செய்தி அவளது மனத்தை உடைத்துவிடுகிறது. உலக வாழ் வைத் தான் துறப்பதோடு அடங்காமல் தன் மகளையும் துறக்கச் செய்கிறாள்.

மேகலையில் மாதவி 'அயர்ந்துமெய் வாடிய அழிவினளாகத்' தொடக்கத்திலேயே தோன்றுகிறாள். அனைவரும் 'ஆடிய சாயல் ஆடியல் மடந்தை வாடிய மேனி கண்டுளம் வருந்தி'த் (2, 14-15) தவிக்கின்றனர். அனுபவ அறிவால் உலக வாழ்வை வெறுத்த மாதவி தன் மகள் மணிமேகலையின் காதல் உணர்ச்சி ததும்பும் உள்ளத்தைக் காட்டுப்படுத்த முனைகிறாள். ஆனால் மாதவியின் தாயான சித்திராபதி அதற்கு எதிரான முயற்சியில் தீவிரமாக ஈடுபடுகிறாள். அது மாதவிக்குப் பெருஞ் சோதனையாக அமைகிறது.

சிலம்பில் தனக்குத்தானே துன்பத்தை வருவித்துக் கொண்ட மாதவி மேகலையில் பிறரால் துன்புறுத்தப் படுகிறாள். முன்னதில் இன்பக் களிப்பால் ஏற்பட்ட மன மயக்கத்தையும் பின்னதில் துன்பத்துரத்தலால் ஏற்பட்ட மனவுடைவினையும் காண முடியும். இரண்டும் வேறுபட்ட சோதனைகளாக மாதவிக்கு அமைகின்றன. சிலம்பில் அவள து திறமையாலும் பெருமையாலும் பெருகிய இன்பம் போதை ஊட்ட அறிவு மயங்கிப் பாடியதால் சோதனைத் தீயில்

வீழ்த்தப்படுகிறாள், மேகலையில் கலையும் கவினும் இழந்த மாதவி அறிவு விளக்கம் பெற்று அரும்பெருஞ் சோதனையில் அமிழ்ந்து விடுகிறாள். சிலம்புச் சோதனை பிறரால் வந்ததினால் வருந்தி வாடுகிறாள். மேகலைச் சோதனை தன்னால் வருவிக்கப் பட்டதினால் வருந்தி மனவலிமை பெறுகிறாள்.

## தாயும் தொடர்பும் :

மாதவியின் நற்றாய் பற்றிய குறிப்பைச் சிலம்பு தருகிறது. அந்தத் தாயும் சிறப்பிடம் பெற்றதாகத் தெரியவில்லை. மாதவியின் பரிசில் மாலையை விற்பனை செய்வதில் கூட அவள் இடம் பெற்றதாகத் தெளிவில்லை.

'மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென
மானமர் நோக்கியோர் கூனிகைக் கொடுத்து' (3, 164-165)

என்று இளங்கோ கூறுகிறார். மாதவியின் நற்றாய் பற்றிய குறிப்பை இரண்டு இடங்களில் மட்டுமே பின்னால் பார்க்க முடிகிறது. அவற்றிலும் தாய்க்குச் சிறப்பான இடம் இல்லை.

'மாதவி மடந்தை நற்றாய் தனக்கு
நற்றிறம் படர்கேன்' (27, 103 - 104)

என்று சொல்லியதாக மாடலன் செங்குட்டுவனிடம் கூறுகிறான். இன்னொரு இடத்தில் மாதவி உலக வாழ்வைத் துறந்தது பற்றி நற்றாய் வருந்திய செய்தி தரப்படுகிறது.

'குலத்தலை மாக்கள் கொள்கையில் கொள்ளார்
யாது நின்கருத் தென்செய் கோவென
மாதவி நற்றாய் மாதவிக் குரைப்ப' (30, 21 - 23)

என்று வரும் இடத்தில் நற்றாயின் வலிவின்மை சுட்டப்படுகின்றது. மகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் புலப்படுத்தும் நற்றாயாக அவள் காட்டப்படவில்லை.

கோவலன் பிரிவால் 'இருந்துயருற்ற' மாதவி 'வருந்துயர் நீக்கென' கோசிக மாணியிடமே வேண்டுகிறாள். இதிலிருந்து நற்றாயிடம் மாதவிக்கு இருந்த தொடர்பின் நெருக்கமின்மை தோன்றும். இளங்கோ எந்த இடத்திலும் மாதவியின் தாயினது பெயரைக் கூறவேயில்லை.

மேகலையில் மாதவியின் தாயான சித்திராபதிக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அவள் ஆணவம் மிக்க பரத்தையாகப்

படம் பிடித்துக் காட்டப் படுகிறாள். துடுக்காகச் செயல்பட்டு மற்றவர்களைத் தன் மனப் போக்குக்கு இசைய ஆடவைக்க வேண்டும் என்ற மனவுறுதி கொண்ட பெண்ணாகத் தோன்றுகிறாள். ஆடலை மறந்து வீட்டோடு அடங்கி இருக்கும் மாதவியின் போக்கு அவளுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. மணிமேகலையைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதைக் கடுமையாக எதிர்க்கிறாள். சிலம்பில் மாதவியின் விருப்பத்திற்கு இணங்கப் பணியாற்றிய வயந்த மாலையை மேகலையில், மாதவியின் தாய் தன் ஏவலுக்கு ஓடும் பணியாளாக மாற்றி விடுகிறாள்.

மணிமேகலையை உதய குமரனின் ஆசைக்கு இணங்கச் செய்ய வேண்டும் என்பது சித்திராபதியின் குறிக்கோள். அதை நிறைவேற்றும் உறுதியுடன் மிக நீண்ட உரையாக வஞ்சினம் கூறுகிறாள். (18, 7 - 36). மனம் அமைதியுறாது, 'வஞ்சினம் சாற்றி நெஞ்சு புகைஉயிர்த்து' (18, 37) அவள் திரிவதாகச் சாத்தனார் கூறுகிறார். இத்தகைய வஞ்சினப் போக்கைச் சிலப்பதிகார நற்றாயிடம் காணவே முடியாது. இளங்கோவின் கதைக்குத் தேவைப்படாத ஆணவப் பண்புடைய சித்திராபதி சாத்தனாரின் கதைக்கு மாதவியின் தாயாக அமைய வேண்டிய தேவை ஏற்பட்டு விடுகிறது. நற்றாயும் சித்திராபதியும் வேறான பாத்திரங்களே என்று கருதவும் இடமுள்ளது. இளங்கோ சித்திராபதியைக் கோள்மறைவு செய்திருக்க முடியுமா என்ற எண்ணமும் எழுகிறது.

## முற்பிறப்புணர்த்தல் :

இரண்டு காப்பியங்களிலும் பாத்திரங்களில் முற்பிறப்பு பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. மாதவியின் வழிமுதல் பிறப்பு குறித்து இளங்கோ கூறுகிறார். சாபம் பெற்ற வானவர் மகளிரான ஊர்வசி மாதவி என்ற பரத்தை மகளாகப் பிறக்கிறாள். அந்த, 'மாதவி மரபில் மாதவி இவளென'க் கூறுகிறார் இளங்கோ.
சாத்தனார் இச்செய்தியை உட்கொண்டு,

'திருக்கிளர் மணிமுடித் தேவர் கோன் கண்முன்
உருப்பசி முனிந்த என்குலத்தொருத்தியும்' (24, 13-14)

என்ற குறிப்பைத் தருகிறார். அதோடு அமையாது நாலு கதைகளில் (7, 10, 11, 12) வேறு வகையாக மாதவியின் முற்பிறப்பு பற்றிய விளக்கத்தைத் திரும்பத் திரும்பத் தருகிறார். மணிமேகலை மாதவியை நோக்கி,

'இரவி வன்மன் ஒருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் தேவி
அமுத பதிவயிற் றரிதில் தோன்றித்
தவ்வைய ராசிய தாரையும் வீரையும்
அவ்வைய ராயினீர் நும்மடி தொழுதேன்' (11, 133-137)

என்று கூறுவதின் மூலம் மாதவியின் பழம் பிறப்புநிலை செவ்வனே புலப்படுத்தப் படுகிறது. மாதவியின் வழி மரபினள் என்று இளங்கோ கூறி அமைந்ததைச் சாத்தனர் இவ்வளவு விரிவாகக் கூறி இருப்பதின் காரணம் சிந்தனைக்குரியது.

## கனவும் நனவும்

கனவு உத்தியைப் பயன்படுத்திச் சில கருத்துக்களைத் தெளிவு படுத்த இரு கவிஞர்களும் விரும்புகின்றனர். கோவலனின் கனவுமூலம் மாதவி மணிமேகலையைத் துறவறப் படுத்தியதை இளங்கோ முற்சுட்டுகிருர்

'மாமலர் வாளி வறுநிலத் தெறிந்து
காமக் கடவுள் கையற் றேங்க
அணிதிகழ் போதி அறவோன் தன்முன்
மணிமேகலையை மாதவி அளிப்பவும்' (15, 101-104)

என்பது கனவின் பிற்பகுதி சாத்தனார் இதே உண்மையை மாதவியின் கனவின் மூலம் கூறுகிறார்.

'காமன் கையறக் கடுநவை யறுக்கும்
மாபெருந் தவக்கொடி நன்றனை யென்றே
நனவே போலக் கனவகத் துரைத்தேன்' (7, 36-38)

என்று மணிமேகலா தெய்வம் கூறுவதாக இக் கனவுச் செய்தி வெளியிடப்படுகிறது. மாதவிக்கு இவ்வாறு ஒரு கனவு தோன்றியதாகச் சிலம்பில் குறிப்பு இல்லை. இரு காப்பியங்களுக்கிடையில் இக்கனவு காண்பதில் ஆள்மாருட்டம் ஏற்பட்டதின் காரணம் அறியத் தக்கதாகும், மணிமேகலை துறவறப் படுத்தப் பட்டாள் என்பதினைக் கோவலன் கனவு மாடலன் வாயுரை, தேவந்தி கூற்று ஆகிய மூன்று வாயில்கள் மூலம் இளங்கோ வெளியிட்டுள்ளார். (15, 101—104; 27, 105—108; 30, 24—28) இவ்வாறு ஒரே செய்தியை மூன்று இடங்களில் திருப்பத் திரும்பக் கூறி வலியுறுத்த வேண்டிய தேவை இளங்கோவுக்கு ஏன் ஏற்பட்டது என்பது சிந்திக்க வேண்டியதாகும். சிலம்பைப் பொறுத்தவரை இது அவ்வளவு முக்கியமான செய்தியில்லை. இவ்வாறு வலியுறுத்திக் காட்டிய இடங்கள் மணிமேகலையைச் சமைப்பதற்கு மிக்க

உதவியாக இருக்கவேண்டும். அந்த நோக்கம் கருதி இளங்கோ இவ்வாறு கூறியது கூறலைச் செய்துள்ளாரா? அல்லது மணிமேகலையின் தொடர்ச்சியை உறுதிப்படுத்த விரும்பியோரின் இடை நுழைப்பா? சிந்தித்து முடிவு காண்பது நலம்.
மாதவி தன் மகளைக்,

'கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறம் கொள்ளச்'

செய்தாள் என்ற செய்தி சிலம்பில் இரண்டு இடங்களில் வருகின்றது. ஆனால் மேகலையில் சாத்தனார் இரண்டு இடங்களில் 'மதுமலர்க் குழலி' (3, 16 : 21, 4) என்று மணிமேகலையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்நிலையில் இரு காப்பியங்களும் ஒன்றுக்கொன்று மாறுபடுவதாகத் தோன்றுகிறது. மேகலையின் இறுதியில் அறவண அடிகளின் அறவுரைப் பயனால் மணிமேகலை துறவு பூண்டதாகக் கூறப்படுகிறது.

"தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்
பவத்திறம் அறுகெனப் பாவை நோற்றனை (30 : 263-264)

என்று கூறிச் சாத்தனார் மணிமேகலையைத் தவத்திறம் பூணச் செய்ததில் மாதவியின் பங்கு மணிமேகலையில் குறைவுபட்டுள்ளது பரத்தமை ஒழுக்கத்தைத் தடுப்பதற்கு மணிமேகலையின் பருவவுணர்வைக் கட்டுப்பட வைத்ததில் மாதவியின் பங்கு மேம்படுகிறது.

## பண்பு வேறுபாடுகள் :

இளங்கோ பல இடங்களில் மாதவியின் புறவழகைச் சிறப்பிக்கும் அடைகளை இணைத்துக் கூறுகிறார். 'மாமலர் நெடுங்கண் மாதவி' என்று ஐந்து இடங்களில் குறிப்பிட்டு அவளுடைய கண்ணழகைக் கண்முன் நிறுத்துகிறார். சாத்தனார் பல இடங்களில் 'மாதவி' என்று கூறுவதோடு நின்று விடுகிறார். முன்னவருக்கு மாதவியின் அழகைச் சிறப்பிக்கும் தேவை ஏற்படுகிறது. பின்னவருக்குத் தேவை இல்லை. மேலும் அவர் அவளைப் பற்றிப் பேசும்போது அவளது அழகு தேய்பிறை நிலையில் உள்ளது. ஆகையினால் இவ்வேறுபாடு இயல்பாக அமைந்துள்ளதாகக் கொள்ளலாம்.

பரத்தையர் குலத்தில் பிறந்த மாதவி குலப் பிறப்பாட்டியரைப் போன்று கோவலன் ஒருவனிடமே அன்பு செலுத்தி வாழ்கிறாள். ஊழ்வினைப் பயனே அவளது வாழ்வைத் தாழ்வினைப் படுத்துகிறது. இளங்கோ மாதவியைச்

'சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மடந்தை' (3, 5-6)

என்ற நிலையில் உயர்வாகப் படைத்துக் காட்டுகிறார். கற்புக் கடம்பூண்ட வாழ்வினைப் பரத்தையரிடத்தும் காண இயலும் என்பதை உறுதிப் படுத்தும் தரமாக மாதவி உருவாக்கப் பட்டுள்ளார். சாத்தனார் காட்டும் மாதவி பரத்தமை போற்றும் சித்திராபதியின் மகளாகப் பிறந்தும் தவமேற்கொண்டு ஒழுகுவதில் பிடிவாதமாக இருக்கிறாள். சிலப்பில் காப்பியத் தலைவியின் இன்ப வாழ்வுக்கு இடையூறாக வரும் மாதவி தான் இன்பம் அனுபவிக்கிறாள். பின் துன்பம் தொடரத் துறவியாகிறாள். மேகலையில் தலைவியின் உலகியல் இன்ப வாழ்வுக்குத் தடைவிதித்துத் தானும் அதற்குக் கட்டுப் படுகிறாள். இளங்கோவின் மாதவி காப்பியத்தலைவியோடு பண்பு நலனிலும் பாத்திரப் படைப்பிலும் ஒப்பிட்டுக் காணும் நிலையில் ஓங்கிச் சிறந்துள்ளாள். ஆனால் சாத்தனாரின் மாதவி தலைவியின் சிறப்புக்கு முன் ஒளி குன்றிக் காணப்படுகிறாள். சிலம்பு மாதவி அறிவு, விளக்கம் தருவதுபோல் மேகலை மாதவியால் தர இயலவில்லை. முன்னவள் மனத்திரையில் முழு உருவாகப் பதிகிறாள். பின்னவள் நிழலாகத் தோன்றி மறைகிறாள்.

## ஆய்வுப் பயன் :

சிலம்பு மாதவியின் தொடர் வாழ்வாகவே மேகலை மாதவியின் வாழ்வும் படைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் படைப்பாற்றல் வேறுபாட்டால் முன்னதில் ஏற்றமுற்றும் பின்னதில் இறக்க முற்றும் தோன்றுகிறாள். காப்பியங்களின் நோக்கங்கள் மாறுபடுவதினால் ஒன்றில் அழுத்திக் காட்டப்படும் பண்பு இன்னொன்றில் மழுங்கச் செய்யப் படுகிறது. வாழ்வியலை வகுத்துக் காட்ட இளங்கோவால் இனிது படைக்கப்பட்ட மாதவியைச் சாத்தனார் பௌத்த சமயக் கொள்கைப் பரப்புக்காகப் பயன்படுத்தியுள்ளார். அமைப்பிலுள்ள மாதவி மணிமேகலை நிகழ்ச்சிகளைத் திரட்டி பௌத்த சமயக் கொள்கைகளைப் பரப்பும் நோக்கத்திற்காகச் சாத்தனார் மணிமேகலையைக் கண்ட காவியம் போன்று சமைத்துள்ளார் என்று கருதலாம். இரு காப்பியங்களுக்கும் இடையே காலக் கழிவு இருந்திருக்கவேண்டும் என உணரவும் இடம் உள்ளது. சிலம்பு மாதவியாகவே மேகலை மாதவியையும் கொள்ள வேண்டும் என்று நினைத்துச் சாத்தனார் படைத்தாலும் பலவித மாறுபாடுகளினால் இருவரும் உருமாறி வேறுவேறு தோற்றங்களாக நம் மனத்திரையில் பதிந்து காட்சி தருகின்றனர்.

# * "வளஞ்செறி வள்ளுவம் - வில்லிபுத்தூராரில்"

'அறிவன்' மா சற்குணம், எம். ஏ.,
மயிலம்.

வான்புகழ் வள்ளுவம் வளஞ்செறி யறநூல்களில் தலையாயது. இதன்கண் தனி மனிதனின் குடும்ப வாழ்க்கை முதல் தரணிக்குரிய அரசியல் வாழ்க்கை வரை அனைத்து நிலைகளிலும் மாந்தர் பின்பற்றுதற்குரிய நெறிகள் பின்னிப்பிணைந்து கிடக்கின்றன. எனவே வள்ளுவர்க்குப் பின் வந்த தமிழ்ச் சான்றோர் பலரும் தம் நூல்களில் திருக்குறட் கருத்துக்களை வேண்டிய அளவு எடுத்தாண்டுள்ளனர். இவ்வகையில் வில்லிபுத்தூரர் பாரதத்தில் இடம் பெறும் "வளஞ்செறி வள்ளுவம்" குறித்துச் சிந்திக்கும் போக்கில் முதற்கண் பாயிரவியலில் ஒரு சான்று காண்போம்

"மலர்மிசை யேகினான் மணாடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்" என்பது மூன்றாம் குறள்.

'அன்பால் நினைவரது உள்ளக் கமலத்தின் அவர் நினைத்த, வடிவோடு விரைந்து சேரலின் 'மலர்மிசையேகினான்' என்று பரிமேலழர் இதற்கு உரை எழுதுவர்.

பதினெட்டாம் நாள் பாரதப் போர் வீமனுக்கும், பலராமனுக்கும் இடையே கடுமையாக நடக்கிறது. கண்ணன் போரைத் தடுக்கச் செல்கிறான். அவனை வில்லிபுத்தூரார்.

"இதயமலர் தோறுமே வருநாயகன்" (18 ஆம் போர் 193) என்று பாடுகிறார். வள்ளுவர் மலர்மிசை என வெறுமனே குறித்தற்கு விளக்கம் தருவது போல் 'இதயமலர் தோறுமே என்பர் வில்லிபுத்தூராழ்வார். இதன் பொருத்தத்தை உறுதிப் படுத்துகிறது இக்குறளுக்கு மேற்காட்டிய பரிமேலழகர் உரை. தொடர்ந்து அறத்துப்பால் செய்திகள் வில்லியில் இடம் பெற்றுள்ளவற்றைக் காண்போம்.

நம் ஒவ்வொருவருடைய குடும்ப வாழ்க்கையிலும் வீட்டிற்கு வரும் மனைவி நற்பண்பும், நற்செய்கையும் உடையவளாக இருத்தல் நல்லது. அவள் நற்பண்புடையவளானால் இல்வாழ்வில் இல்லாதது என்ன ? நற்பண்பு இல்லாதளானால் இல்வாழ்வில் இருப்பதுதான் என்ன? என்ற வினாக்களை

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை" எனக் கேட்டு

* இது கட்டுரை ஆசிரியர் 21—6—85 அன்று புதுவை வானொலியில் நிகழ்த்திய இலக்கிய உரையின் ஒரு பகுதி

நம்மை நெடிது நினைந்து விடைதேடச் செய்கிறார் திருவள்ளுவர்.

"இல்வாழ்பவர்க்கு மடவார்அலது யாவர் இன்பம்
நல்வாழ்வு தேசு புகழ் யாவும் நடத்து கிற்பார்
தொல் வானவரின் மயோரிற் துறக்க பூமி
செல்வார் பெறும் பேறின் நீயருள் செய்தி யென்றான்"

என்ற வில்லிபுத்தூராரின் பாடலில் குடும்பத் தலைவனுக்கு உள்ளன யாவை என்பன நன்கு விளக்கப் பெறுகின்றன. நல்வாழ்வு ஒளி புகழ் அனைத்தும் மனைவி உடனிருப்பின் மட்டுமே நிலைபெறும் என்கிறார். எனவே இல்லது என்ன உள்ளது என்ன என வள்ளுவர் கேட்ட வினாக்கட்கு வில்லியின் இப்பாடல் வரிகள் விளக்கம் தருவனவாக அமைந்துள்ளதை எண்ணி இன்புறலாம்.

மனைவி நிலையில் இருந்து மனைக்கு விளக்காகிய வாணுதல் மடந்தை ஒருத்தி தாய்மை நிலையடைகிறாள். தனக்குப்பிறந்த குழந்தை ஆண்மகன் என்பதைக்கேட்ட மாத்திரத்திலேயே, "வயாவும் வருத்தமும் ஈன்றக்கண் நோவும்" ஆகிய அனைத்துத் துன்பங்களையும் மறந்து மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கிறாள். அதற்கு மேலும் மகிழ்ச்சி கொள்ளும் காலம் ஒன்று ஒவ்வொரு தாய்க்கும் உண்டு என்பதை அறிந்த வள்ளுவர், அதனை

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்று அறிவிக்கிறார். உற்றார் உறவினரோ அன்றி மற்றார் மூலமோ தன் பிள்ளை சிறந்த அறிவாளி அல்லது மாபெரும் வீரன் என்பது போன்ற பாராட்டு மொழிகளைக் கேட்டால் அவள் மனம் அவனை ஈன்ற பொழுதை விட எக்களிப்பால் துள்ளிக் குதிக்குமாம்.

இக்குறளுக்கு விளக்கம் தருவதாக வில்லியின் சொற்களும் அமைகின்றன. விராட நகரத்தில் மறைந்து வாழும் பாண்டவர்களை வெளிப்படுத்தி விட்டால் மீண்டும் 12 ஆண்டுகள் அவர்களை நாட்டிற்குத் திரும்பாமல் செய்திடலாம் என்ற எண்ணம் கொண்ட துரியோதனன் அதற்காக நிரை கவரச் செய்கிறான். நிலைமை மோசமாவதை அறிந்த விராடன் தேவி சுதேட்டினை சேனைத் தலைவர்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு திக்கிற்கும் அனுப்பி விட்டு மேற்குத் திசைக்கு அனுப்ப ஆள் இன்றிக் கவலையுற்றாள். அப்போது பேடியாக இருந்த அருச்சுனன், "எதற்கும் கவலைப்படாதே, உன் குமாரன் உத்திரனை என்னுடன் அனுப்புக,வில்லாற்றலால் வேற்றவரை விண்படரச் செய்வேன்" என்கிறான். அதன்படிச் செய்தும் வெற்றி பெறுகிறான். உண்மையில் வென்றது அருச்சுனனாயினும் உத்திரன் வென்றதாகத் தூதர்கள் மூலம் அறிந்த தாய்

" ஈன்ற அப்பொழுதின் ஓகை எண் மடங்காக விஞ்சிச்
சான்றோன் மகனைக் கண்டு மகிழ்ந்தனள் தலத்தின்
மிக்காள் " (நிரை 134)

என்று கூறுமாறு மகிழ்ந்தாளாம். வள்ளுவர் பெரிதுவக்கும் என மொழிந்ததை இவ்வாறு பெரிதாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் வில்லியார்.

14-ஆம் நாள் போரில் வீமனோடு சண்டையிட விகர்ணன் வருகிறான். அத்தினாபுரியில் தர்மன் சூதாடித் தோற்ற பிறகு துச்சாதனன் திரௌபதியைத் துகில் உரியச் சொன்னபோது அச்சபையில் தடுத்துக் கூறியவன் இவன் மட்டுமே. இவனுடன் நாம் போர் செய்யலாமா என்று நினைத்துப் பார்த்த வீமன், "தம்பி, உன்னிடம் நாங்கள் போர் செய்ய மாட்டோம், சென்று வா', என்கிறான். இதனை

" சுடுவுரைக்கல் அன்ன துச்சாதனன்
வடுவுரைக்கவும் மன்னுரை மன்றிடை
நடுவுரைக்கும் நன்னா வுடையாய் உனைக்
கொடுவுரைக்கணை ஏவினும் கொல்லுமோ ? " என்பர்

வில்லிபுத்தூராழ்வார் இங்கு நிறைமொழி மாந்தர் சாபம் அன்ன கொடிய அம்பை ஏவினாலும் அது நின்னைக் கொல்லாது என்கிறார். இப்பாடலில் நடுவுரைக்கும் நல்நாவுடையாய்' என்பது

'சமன் செய்து சீர் தூக்குங் கோல் போல் அமைந்தொருபால் கோடாமை'' என்று வள்ளுவர் சான்றோர்க் கணியாகக் கூறிய குறட்பாவை நினைவுட் கொண்டு எழுதப் பெற்றதோ என எண்ணத் தோன்றுகிறது.

" தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு" என்பது வள்ளுவம்

இதை மனத்துட் கொண்டு வில்லி ஒரு காட்சியைப் படைக்கின்றார். அவையினில் பாண்டவர்கள் அவலமுற்றமை கருதித் திருதராட்டிரன் அவர்கட்குச் சமாதானம் கூறி அனுப்ப விரும்புகையில் சகுனி குறுக்கிடுகிறாள். பாண்டவர்கட்காக மயன் அமைத்துக் கொடுத்த மாளிகையில் துரியோதனன் வரும் போது வீமனும் துரௌபதியும் நகையாடியசொற்களை மனத்துட்கொண்டு,

" தீயினாற் சுட்ட செப்புண் ஆறும் அத்தீயிற் தீய
வாயினாற் சுட்ட மாற்றம் மாறுமோ, வடுவே யன்றோ ?"

என வினவும் சகுனியின் சொற்கள் வள்ளுவத்தையே பெயர்த்து

வைத்திருப்பது போன்று அமைந்திருப்பது ஒப்பு நோக்கத் தக்கது. இவ்வாறு அறத்துப்பால் குறட்பாக்கள் மிகப் பல வில்லியின் பாடல்களில் விளக்கத்தோடு இடம்பெற்றுள்ளன. இனி பொருட்பாலின் பெற்றியை அவர்தம் பாடல்களில் கண்டு மகிழ்வோம்.

மாபாரதப் போருக்குப் மளமளெனப் படைகள் புறப்பட்டன. தருமன் படைத் தலைமை தாங்கும் மன்னர்களைப் பார்த்து ''உங்கள் துணையால்தான் நான் வெற்றி பெறப் போகிறேன்'' என்று சிறப்பித்துப் பேசுகிறான். அதைக்கேட்ட அரசர்கள், ''எங்கள் உயிர் உடைமை படையாவும் தங்களுடையனவே'' என மொழிகிறார்கள். இதனை,

''எங்கள் ஆவியும் எம்பெருஞ்சேனையும் யாவையும்
நினதென்றசர்
தங்கள் வீரமும் மானமும் மரபும் நல் வாய்மையும் தவறில்லார்''

என்பர். இதில் வரும் மானம் என்ற சொல் 'இறை மாட்சி'யில் வள்ளுவர் கூறும்.

''அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு'' என்ற குறட்பாவில்

உள்ள 'மறனிழுக்கா மானத்தை நினைவு படுத்துவதாகிறது.

மறனிழுக்கா மானம் என்பதைப் பெயரெச்சத் தொடராகக் கொண்டு 'வீரத்திற் பிழையாத மானம்' என்று பரிமேலழகர் உரை கூறுவர். அதையே உம்மைத்தொகையாகக் கொண்டு வீரமும், சிறிதளவும் தன்னிலையிலிருந்து தாழா மானமும் எனச் சிறப்பாக இரு பொருள் கொண்டார் என்பதனை 'வீரமும் மானமும் ............ தவறில்லார்' என்ற அவர் தம் தொடர் அறிவிக்கிறது. இவ்வாறு வில்லி வளஞ்செறி வள்ளுவத்தைத் தம் படைப்பில் மேலும் பொலியச் செய்கிறார்.

ஒரு செயலைத் தொடங்குமுன் அதனால் வரும் ஆக்கம், கேடு ஆகியவற்றை எண்ணிப் பார்த்துப் பின் விளையும் ஊதியத்தையும் உளத்திற் கொண்டு செயல் செய்க என்பது வள்ளுவர் கருத்து இதனை

'அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழி பயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்' என்கிறார் வள்ளுவர்

அரசன் அறங்கூறும் சுற்றத்தைக் கலந்தாலோசித்தே காரியங்களைத் தொடங்க வேண்டும். இல்லையேல் அழிவது உண்மை என்ற

கருத்தைத் 'தெரிந்து செயல் வகை' என்ற அதிகாரத்தில் உரைக்கிறார் வள்ளுவர். தம் முயற்சி கேட்டையே தரும் என்பது தெரிந்திருந்தும் தீமையைச் செய்பவனுக்கு அழிவு வருவது உறுதி. எனவே எச்செயலை மேற்கொண்டாலும் செயல் முடிக்கும் வகையினையும், வரும் தடைகளையும் எண்ணிச் செயல் வேண்டும். இக் கருத்துக்களை குறள் 116, 676 ஆகியவற்றில் வள்ளுவர் கூறிப்போந்தார்.

இக்கருத்துக்கள் பலவற்றையும் ஒரே பாடலில் வில்லி செறித்து வைக்கிறார். கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில் விதுரன்.

ஆவது கருதானாகில் அமைச்சர் சொற் கேளானாகில்
வீவது குறியானாகில் விளைவதும் உணரானாகில்
நாவது காவானாகில் அவனுக்கா நடந்து போரில்
சாவது பழுதாம் என்று சகத்துளோர் சாற்றுகின்றார். (142)

என்று பேசுகிறான். இதில் வரும் தொடர்கள் பலவும் 'தெரிந்து செயல் வகை', 'வினைத் தூய்மை', 'அடக்கமுடைமை', 'வினை செயல்வகை', முதலிய பல அதிகாரங்களை உட்கொண்டுள்ளமையை எளிதில் அறியலாம்.

வினை செய்கையில் இடனறிந்து செயல் வேண்டும். இல்லையேல் தீமை நேரும். இதனை, காலாழும்படியான களர் நிலத்தில் சிக்கி விடின் வேலாளைக் குத்திய மருப்புடைய மத யானையைக் கூட ஒரு சிறு நரி கொன்று விடும் என்ற செய்தியால் உணர்த்துவர் வள்ளுவர்.

காளமாமுனிவர் பாண்டவர்களைக் கொல்லும் யாகத்தைச் செய்யத் துரியோதனன் ஏவலால் காட்டுக்குச் சென்றார். அக்காட்டின் தன்மையைப் பாட வரும் வில்லி,

'யானை யோடிட நரி துரத்திடு நிலத்தெறி வெயிற் கழைமுத்தம்
வானெலா நெடுந் தாரகை போலெழும் மால்வரைப் புறஞ்

சார்ந்தான், என்கிறார். இங்கு,

"யானை ஓடிட நரி துரத்திடு நிலம்' என்ற இச் செய்தி,
"காலாழ் களரின் நரியடும், கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு'

என்ற குறட் கருத்தைப் பிரதி பலிப்பதைக் காண்கிறோம்.

இது போல் 'காலம் அறிதல்' என்ற தலைப்பில் குறள் கூறும்

செய்தியை ஒரு நிகழ்ச்சியால் உணர வைக்கிறார் வில்லி. விராட தேசத்தில் பாண்டவர்கள் தங்கியிருந்த போது திரௌபதியைப் பெற வேண்டும் என நினைந்த கீசகனை உடனே அழிக்க வேண்டும் என்ற தம்பியர்க்குத் தருமன் பொறுத்துச் செய்வோம் என்று கூறுகிறான். எத்துணைப் பெருந் தீமையைப் பகைவர் செய்தாலும் மனம் வெந்து உடனே தண்டிக்கக் கூடாது. காலமறிந்து செயல் வேண்டும் என்ற குறட் கருத்துக்கு இலக்கியமாகிறது. தருமனின் இச் செயல்.

இனி, வளஞ்செறி வள்ளுவத்தின் பொருட் சிறப்பு மட்டுமன்றிச் சொல்லாட்சிகள் கூட வில்லியின் பாடல்களில் ஒல்லும் ஆறெல்லாம் உரிய இடம் வகிப்பதற்கு ஒரு சான்று காண்போம். ஒழுக்கமுள்ள சான்றோரின் வாய்ச் சொற்கள் வழுக்கலுடைய சேற்று நிலத்தில் ஊன்றுகோல் போல் துணையாகும் என்பது 415-ஆம் குறட் கருத்தாகும்.

சூதாட்டத்தால் நாடு, நகரம் அனைத்தையும் இழந்து, பாண்டவர்கள் நொந்து ஆறுதல் கூறுபவர் யாருமன்றிக் காட்டில் வருந்தி வாழும் நிலையில் வியாசர் அங்கு வருகிறார். அவர் வருகை பாண்டவர்க்கு ஆறுதல் அளிப்பதாக இருந்தது என்பதைக் கூறும் வில்லி

''செறிந்தவர்க்கு ஊற்றங் கோலாம் செய்தவ முனியும் வந்தார்''
(அர்ச்சு. தவ. 22)

என்கிறார். 'இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே' என்ற வள்ளுவரின் சொல்லாட்சியோடு ,ஊற்றங்கோலாம் என்பது ஒருபுடை ஒத்து' மகிழ்வளிக்கிறது இவ்வாறு பற்பல விடங்கள் பொருத்தமுற அமைந்துள்ளன. இறுதியில், காமத்துப்பாலின் தாக்கம் வில்லியில் அமைந்துள்ளவற்றை அறிந்து மகிழ்வோம்.

தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்ட அருச்சுனன் பாண்டிய நாட்டைச் சேர்ந்து அரண்மனையில் தங்கியிருந்தபோது செண்பகத் தோட்டத்தில் சித்திராங்கதையைச் சந்தித்தான். இருவரும் மாறி மனம் கலந்தனர் என்பதை வில்லி,

செந்திருவையனையாளும் திருமாலையனையானும்,
சிந்தையொன்றாய்
வந்திருவர் விலோசனமும் தடையின்றி மகிழ்ச்சி கூற'
என்கிறார்,

இப்பாடல் 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல'' (1100) என்ற குறட்பாவை விழுங்கி இருப்பது நன்கு புலனாகிறது,

தன் மனைவி நளாயினியிடம் மௌத்கல்யர் உனக்கு வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொள் எனக் கூற அதற்கவர்,

'நின்னோய மென்றும் பிரியா நலனேர்க' என்று வரங் கேட்கிறாள். இக்கூற்று, 'புலவி நுணுக்கத்தில்' வரும்

'இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர் கொண்டனள்' என்ற (1315) குறளை

நினைவு படுத்துவதை எளிதில் அறியலாம். இவ்வாறு வளஞ்செறி வள்ளுவம் வில்லிபுத்தூராரில் விருப்பூட்டும் வகையில் விரவியிருந்து விழுப் பயனோடு இலக்கியச் சுவைகொள இயங்கி வருகிறது.

நன்றி : அகில இந்திய வானொலி.

# தமிழுக்கும் சிந்தி மொழிக்கும் உறவு-புதிய கண்டு பிடிப்பு

புலவர் நா, இராசகோபாலன்,
எம் ஏ., டி.லிட்., பி.லிட். எஸ்.சி.,
டிப். பிரஞ்ச்,
நூலகர், தலைமைச் செயலகம்,
சென்னை-9.

தமிழ் உயர் தனிச் செம் மொழிகளில் ஒன்று. இது காலத்தால் தொன்மையுடையது. தமிழ் உலகின் முதன்மை மொழி என்று ஆராய்ச்சியும் தற்போது நடைபெற்று வருகிறது.

தமிழே உலக மொழிகளின் தாய் என்று மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் ஆய்ந்துரைத்திருக்கிறார். தமிழிலிருந்து கிரேக்கமும் இலத்தினும் ஆங்கிலமும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சொற்களை ஏற்றுக் கொண்டுள்ளன என்று மூதறிஞர் ஞானகிரி நாடார் ஆய்ந்தறிந்து. சொல் மாற்ற விதிகளையும் அறிவித்துள்ளார். உலக முதல் மொழி தமிழே என்று பொறியியலறிஞர் இரா. வேங்கடகிருஷ்ணன் வேறு கோணத்திலிருந்து பார்த்துக் கூறியிருக்கிறார். தொழில் நுட்பக்கல்லூரியில் முன்னாள் முதல்வர் ஞானசுந்தரம், தமிழுக்கும் மறைந்துபோன தொன்மையான மொழிகளுக்குமுள்ள தொடர்பைப் பற்றி ஆய்ந்து கொண்டிருக்கிறார். பேராசிரியர் அருளி, தமிழுக்கும் ஆங்கிலத்திற்குமுள்ள உறவு நிலையை எடுத்துரைத்துக் கொண்டு வருகிறார்.

ஜப்பானிய மொழியில் 500க்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் உள்ளன என்று ஜப்பானிய மொழியியல் அறிஞர் கூறியுள்ளார். மங்கோலிய, கொரிய மொழிகளில் தமிழ்ச் சொற்கள் உள்ளன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது: ஆப்பிரிக்க மொழியில் 400 தமிழ்ச் சொற்கள் இருக்கின்றன என்று செனகல் நாட்டு முன்னாள் ஆட்சித் தலைவர் செங்கோர் ஆய்ந்து அறிவித்திருக்கிறார். ஆஸ்திரேலிய நாட்டுப் பழங்குடி மக்களின் மொழியில் தமிழ்ச் சொற்கள் உள்ளன என்று ஆய்வறிஞர் மௌலானா சுட்டிக் காட்டுகிறார். சிந்துவெளி நாகரிகத்தினர் தமிழின் தொன்மை மொழியைப் பயன்படுத்தி வந்தனர் என்றும், அம்மொழிக்கும் சுமேரிய மொழிக்கும் தொடர்பு உண்டு என்றும் ஆராய்ச்சி உலகம் கருதுகிறது

ஒரு காலத்தில் இந்தியா முழுவதும், தமிழே ஆட்சி மொழியாக இருந்தது என்று அறிஞர் கந்தையா பிள்ளை தெரிவித்திருக்கிறார். வட இந்தியாவில் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த

கூய், கோலம், கோண்டு, குருக், ஓரோவன், மால்டோ முதலிய மொழிகள் இருக்கின்றன என்று மைய அரசின் மக்கட் கணக்குநூல் அறிவிக்கின்றது. இந்தக் கருத்தைப் பேராசிரியர் டாக்டர் பர்சோ சித்வானி செய்துவரும் ஆராய்வு உறுதிப்படுத்துகிறது. அவரது தாய்மொழி சிந்தி. அவர் பிறந்த மண், தற்போது பாகிஸ்தானத்திற்குள் அடங்கிவிட்டது. அவர் மொகஞ்சதாராவின் அருகிலுள்ள சிற்றூரில் பிறந்து வாழ்ந்தவர். அவர் இப்போது பூனாவிலுள்ள தக்காணக் கல்லூரியில் சிந்தி மொழிப் பேராசிரியராகப் பணியாற்றுகின்றார்.

டாக்டர் சித்வானி சிந்தி மொழியில் வேர்ச் சொற்களை ஆராய்ந்து வருகிறார். இவற்றில் சில சொற்களுக்கு மூலச் சொற்கள் கிடைக்கவில்லை. சிந்தி சமஸ்கிருதத்தின் இனமொழியாகச் செயல்படுவதால், அவர் சமஸ்கிருதத்தின் அந்த வேர்ச் சொற்களைத் தேடினார். அவை, அதில் கிடைக்கவில்லை. அவர் எமனோவ் என்ற மொழியியல் அறிஞர் தயாரித்த திராவிடச் சொல்லகராதியைத் தற்செயலாகப் பார்த்தார். அதில் அவர் தேடிக் கொண்டிருந்த சிந்திச் சொற்களுக்குத் தமிழ் வேர்ச் சொற்கள் கிடைத்தன.

சென்னையில் பெரியார் நூலக வாசக வட்டத்தில் 26—6—83 அன்று சிந்தி தமிழ்மொழி உறவு பற்றி அவர் ஆராய்ச்சி உரை நிகழ்த்தினார். அப்போது, மொழியின் அடிப்படைச் சொற்களை எண் பெயர், இடப் பெயர், உறுப்புப் பெயர் முதலியன கொண்டு, சிந்தியில் பன்னி (பண்ணை) மாடி (மாடி) நாரி (நாரிகால் ஆன கயிறு) காவதி (காவடி) ரென் (இரண்டு) மூன் (மூன்று) நார் (நான்கு) ஆனால் (ஆயா) மூசை (மீசை) கோட்டு கோட்டை முதலிய சொற்கள் தமிழிலிருந்து சிந்திக்கு வந்தன என்று கூறினார். அவர் சிந்தியில் 2000 தமிழ்ச் சொற்கள் இருக்கலாம் என்று நம்புகிறார்'கச்' பகுதியில் சிந்திப் பகுதியில் மக்கள் (மீனவர்கள்) வாழ்கின்றனர். அவர்கள் பேச்சில், தமிழ்ச் சொற்கள் இன்னும் அதிகமாக இருக்கின்றனஎன்றும் அவர் தெரிவித்தார்.

இவரது அரிய முயற்சி திராவிடமொழி, ஆய்வில் புதியதொரு பகுதியைத் வைத்துள்ளது. சிந்திக்கும், தமிழுக்கும் உறவுண்டு என்ற இவரது ஆய்வு முடிவிற்கு வடநாட்டில் வரவேற்பில்லை. இவருக்கு மடல் எழுதி ஊக்கம் தரவேண்டியது தமிழன்பர்களின் கடமையாகும்.

# மதியுடம்பட்ட மாக்கட் சீதை

புலவர் த. சா, இராமராவ்,
திருவையாறு.

காவியம் இயற்றத் துணியும் கவிஞனுக்குத் துணை நிற்பன பல. கவியியற்றும் ஆற்றல், பரந்த உலகியல் அறிவு, அணியும் சுவையும் குன்றாதுரைக்கும் பண்பு, புலனெறி வழக்கை முற்றுமுணர்ந்த பேரறிவு ஆகியன அவற்றுட் சில. இவற்றுள் ஒன்று குறையினும் காவியம் சிறப்புற அமையாது. ஈற்றதாகிய தொன்னூல் வழக்கமென்னும் புலனெறி வழக்கினை உணரா தொழியின் முந்தையோர் முறைபுணரா நெறியிற்புக்கு இடர்ப்பட நேரும்.

ஒரு கவிஞன் இயற்றித்தரும் எந்த நூலும் நாட்டின் கலாசாரத்திற்கும் நாகரிகத்துக்கும், பழக்க ஒழுக்கங்களுக்கும் மாறுபடாமல் அவற்றோடு ஒத்திருத்தல் வேண்டும். மாறுபட அமையுமாயின் அது நல்லோரான் இகழப்பட்டு ஒதுக்கவும்படும். எனவே உலக வழக்கும் புலனெறி வழக்கும் முற்றும் உணர்ந்தவனே காவியம் இயற்றத் தகுதி யுடையனாவான். இம்முறையில் முந்தையோர் இயற்றித் தந்துள்ள பெருநூல்களின் பயிற்சியும் அவற்றின் ஆழ்ந்தபற்றும் அவன்பால் மிளிரவேண்டும். முந்து நூல்களில் மூழ்கித் திளைத்தது மட்டுமின்றி முன்னோர் மொழி பொருளையும் அவர் தம் சொற்களையும் பொன்னெனப் போற்றித் தன்னூலிலும் ஏற்ற பெற்றி இடம் பெறச் செய்ய வேண்டும். முன்னோர் முறைகளைக் காரணமின்றி உதாசீனம் செய்தல் மடமை. அஃது வெறுக்கத்தக்க நெறி,

தமிழ் மொழியின் வரலாற்றில் முந்துநூல் கண்டு போற்றாக் கவிஞர்களே இருந்ததில்லை எனலாம். ஒல்காப் பெருமை தொல்காப்பியனாரும் தாம் கூறப் புக்க கருத்துக்கள் மிக்க தொன்மையுடையன என்பதையும் அவை முன்னையோர் மொழிந்த நிலையுடையன என்பதையும் தெரிந்து உணர்த்த பல இடங்களில் 'என்ப' என்றும் ''என்மனார் புலவர்'' என்றும் நூல் யாத்துள்ளார். அதனால் அவர் புகழ் அணுவளவும் குறைவுற வில்லை. மாறாக அது அவர் பெருந்தன்மையை, நேர்மையை உயர்த்தி நிற்கிறது. அன்றியும் நாட்டின் தொன்நெறி வழக்கின் பழமையை உணரச் சான்றாயும் நிற்கின்றது. எவ்வளவு புதிய நூலாயினும் அதனால் பழமையை முற்றும் துறந்து தளித்து நிற்க இயலாது.

இம்முறையில் இராமாயண காவியம் இயற்றிய பெருங்கவிஞர் கம்பர் முந்து நூற்பொருள்களை எங்ஙனம் மதித்து எங்கெங்கு எவ்வெவ்வாறு தம் நூலில் எடுத்தாண்டுள்ளார் என ஆராயப்புகின் அது எல்லையின்றிப் பெருகி நிற்கும். எடுத்துக் காட்டுக்கள் ஒன்று பத்தொன்றாகாமல் நூறு ஆயிரம் எனப் பெருகி விரியும். ஆதலால் அம்முயற்சியைக் கைவிட்டு ஒன்றை மட்டும் ஈண்டைக்குக் காட்ட முனைவாம்.

கவியரசர் கம்பர் வான்மீகியின் நூலையே தமக்கு முதனூலாகக் கொண்டாரேனும் அவர் போக்கினை முற்றும் தாமும் பின்பற்றிச் கவிசெய்தாரல்லர். பெரும்பாலும் வான்மீகியின் கதைப் போக்கினைத் தழுவி நூல் செய்த கம்பர் சிற்சில இடங்களில் அவர் போக்கினைக் கைவிட்டுப் புதியதோர் முறையினைக் கைக்கொண்டு நூல் செய் துள்ளார் என்பது அறிஞர் பெருமக்கள் அறிந்த தொன்று. முதனூற் கருத்தை மாற்றிய திறத்தால் அவர் தமிழர் நாகரிகத்தை, பண் பாட்டை, பழக்க ஒழுக்க நெறிகளை அழியாமற் பாதுகாத்து உயர்த்தியுள்ளார் என்பதை யாவரும் சிந்தித்துணரத்தக்கதாகும். பின்வரும் கம்பராமாயண நிகழ்ச்சி இதனை வலியுறுத்திக்காட்டும்

கோசிக முனிவரோடு தம்பியும் தானுமாக மிதிலையிற் புக்க இராமன் வில்லை முறித்த பின்பே சீதையைக் கண்டான் என முதனூலாசிரியர் கூறியிருக்கக் கம்பர் கன்னி மாடத்தின் உப்பரி கையில் சீதையையும், மிதிலை மாநகர் வீதியில் இராமனையும் நிறுத்தி 'அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்'', என்பதோர் அற்புதகாட்சியைப் படைத்துத் தந்துள்ளார். நோக்கியது மட்டுமன்று இருவரும் இதயம் மாறிப்புக்கனர் என்றும் பாடினார். உழுவலன்பினால் ஒன்றுபட்ட அவர் உள்ளங்களின் செயலுக்கு ஒரு நியாயம் கற்பிப்பார் போன்று

மருங்கிலா நங்கையும் வசையிலா ஐயனும்
ஒருங்கிய இரண்டுடற் குயிரொன் றாயினார்
கருங்கடற் பள்ளியிற் கலவிநீங் கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ.

எனவும் பாடிவிட்டார். வில்லை முறிக்கும் செயல் இதற்குப் பிறகு தான் நிகழ்கிறது. முதனூல் கூறாத இந்நிகழ்ச்சியைக் கம்பர் புகுத்தக் காரணம் யாது? இதனால் விளையும் நன்மை என்ன? என்பன போன்ற வினாக்களை எழுப்பி விடை காணல் உவகை பயப்பதொன்று.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## கதையாசிரியர்களும் உத்திகளும்

இரா. சண்முகவேலன்
எம். ஏ., எம். பில்., பி. டி., பிஎச். டி.

தன்னுடைய தாய்வழிப் பாட்டனார் தினமும் கதைகளைச் சொல்லக் கேட்ட பழக்கத்தால் தானே கதைகளைப் படித்தறிய சிறிது கல்வி கற்றார். கதைகளைப் படித்ததால் அதே ஊரில் உள்ள பணக்காரரின் பெண்ணான தெய்வயானையின் மீது காதல் கொண்டு அவளை மணந்து கொள்ள விரும்பினார். தாயார் சேர்த்து வைத்திருந்த சிறு தொகையைக் கொண்டு சாராயக் கடையை முதலில் குத்தகைக்கு எடுத்தார்; பின்னர்க் கள்ளுக் கடையைக் குத்தகைக்கு எடுத்தார். பொருள் குவிந்தது. இதற்கிடையில் தெய்வயானையின் தந்தையார் குடித்து நொடித்துப் போனார்; போனதுடன் ஓமக் குட்டி முதலியாரின் உதவியையும் நாடினார். முதலியார் வாய்ப்பைப் பயன் படுத்த எண்ணிய சமயத்தில் அப்புக்குட்டி முதலியார் இறந்தார். ஓமக் குட்டி முதலியார் தெய்வயானையை மணந்து கொள்வதால் விளையும் ஏதங்களை அசை போட்டுக் கொண்டிருந்த சமயத்தில் தெய்வயானையும் தெய்வயானையின் சித்தியும் (தகப்பனாருக்கு இரண்டாந்தாரமாய் வாய்த்த இளம் பெண்) ஊஞ்சலில் உட்கார்ந்து சாராயத்தைக் குடிப்பதை நேரில் காண நேர்ந்தது. அதனால் அவர் மனம் வெறுப்புற்றுக் கள்ளுச் சாராயக் கடைகளைத் தொலைத்துத் தலை முழுகி விட்டு, இருந்த செல்வத்தையெல்லாம் கோயிலுக்கும், மடத்திற்கும், பள்ளிக்கூடத்திற்குமாக எழுதி வைத்தார். பிறகு சிறு தொகையோடு தாயுடன் சென்னைக்கு வந்து வெற்றிலைப் பாக்குக் கடை வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார்.

இனி, கதையில் அமைந்துள்ள உத்திகளைக் கவனிப்போம்.

கதையின் நிகழ்ச்சிகள் ஓமக் குட்டி முதலியாரின் கூற்றில் சொல்லப்படுகின்றன; அதாவது, தற்கூற்று (First Person Point of View) உத்தியின் வாயிலாக இயங்குகிறது. கதை, கடந்த காலத்திலிருந்து தற்காலத்திற்குச் சீராக நகர்கிறது. இவ் வியக்கத்திற்கும் (Movement) பின்னோக்கு உத்தி பெருந்துணை புரிகிறது. ஓமக்குட்டி கதை முழுவதும் வருகிறார். ஆகவே, கதையின் தலைமை மாந்தர் அவரே ஆனால், கதையின் தொடக்கத்தில் கதையாசிரியர் 'கல்கி' ஒரு கதை மாந்தராக இடம் பெறுகிறார் இவருடைய இந்தப் பாத்திரப்படைப்பு, அதாவது, கதையாசிரியரே

தைமாந்தராக வருவது, வி.ஸ. காண்டேகரின் கருகிய மொட்டில் கையாண்ட ஓர் உத்தியினைச் சார்ந்த தாகும். மேலும், 'கல்கி' தற்கூற்றில் கதையைக் கூறுகிறார். ஆக இக்கதையில் ஆசிரியர் தற்கூற்று + கதைமாந்தர் தற்கூற்று ஆகிய இருவகைத் தற்கூற்று உத்திகள் உள்ளன. இருப்பினும், கதைமாந்தரின் கூற்றே பேரளவு பெறுகின்றது. ஓரிடத்தில் கதைமாந்தரின் கூற்றினிடையே 'கல்கி' தலைகாட்டுகின்றார். அப்படிப்பட்ட வேளையில் ஆசிரியரின் குரலைப் பிரித்தறிய அடைப்புக்குறி இடம்பெற்றுள்ளது. கதை நிகழும் காலம் இருபதாண்டுகளுக்கு மேல் ஆகும். விரிப்பு உத்தியே ஆட்சி செலுத்துகின்றது ; வருணனை உத்திக்கு இடமே இல்லை. நாடக உத்திசற்றுத் தலைகாட்ட, மனப்பேச்சு உத்தி (Interior monoloque) ஆங்காங்கே பெயர்ச் சொல்லிக் கொள்கிறது. கதையில் குடியால் குடும்பம் குலைவதுடன் பண்பாட்டுக் குலைவும் ஏற்படுவதாகக் காட்டப்படுகிறது. 'புதுக் கடை'யில் கந்தப்பன் குடியை வெறுக்கிறான். 'தெய்வயானை'யில் முதலியார் குடிக்காசைத் தர்மங்களுக்குச் செலவிடுவதன் மூலம் பாவ மன்னிப்பைத் தேடுகிறார். ஆயினும், இருவருமே குடியினின்றும் அந்நியமாகின்றார்கள். 'தெய்வயானை'யில் பாட்டனார் பேரனுக்கு நளனுடைய கதையைச் சொல்லி வருகையில் தமயந்திக்கு இரண்டாவது சுயம் வரம் என்று நளனுக்குச் செய்தி வந்த இடத்தில் திடீரென்று நிறுத்திவிடுகிறார்; மறுநாள் இறந்தும் போகிறார். இந்த நிகழ்ச்சியில் 'கல்கி' மறைக் கவர்ச்சி (Suspense) என்கிற உத்தியைப் புகுத்தியுள்ளார்.

'அடிச்சுவடு'வின் கதை இது :

தயாளன் இரவு நெடுநேரம் கழித்துக் காரில் வீடு வந்து கொண்டிருக்கையில் மழை பிடித்துக் கொள்கிறது. அத்துடன் காரும் அவனுடைய வீட்டிற்கு எதிரில் வந்ததும் நின்று விடுகிறது. மழையில் நனைந்து கொண்டு மது வருந்தியிருந்ததால் தள்ளாடியவாறு வீட்டிற்குள் நுழைகிறான். வீட்டின் ஒரு பகுதியில் இருந்த கமலமும் கண்ணனும் அவனது செயலைக் குறித்து வருத்தத்துடன் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதனை மறைவில் நின்று கேட்டு மனம் மாறுகிறான். தன்னுடைய மனைவியையும், கமலம், கண்ணன் ஆகியோரையும் பார்த்து கண்ணீர் வடிக்கிறான். காந்தியடிகளின் படத்திற்கு முன் நின்று வணங்கிக் குடிப்பதில்லை என்ற முடிவிற்கு வருகிறான்.

கதையின் தொடக்கம் இயற்கை வருணனையுடன் எழுகிறது. கதை படர்க்கைக் கூற்றில் சொல்லப்படுகிறது. தயாளனின்

வருகையில் தொடங்கிய கதை பிறகு பின்னோக்கு உத்தியில் திரும்பி அவனுடைய பெற்றோர்களைப் படம் பிடித்துக் காட்டு கிறது. தயாளனின் பொன்னியூர் கிராமத்துத் தந்தையாருடைய நிலை, அவருடைய வாழ்க்கை, தொண்டு, இறப்பு முதலியனவும் தாயாரின் கவலை, மைதிலி-தயாளன் வாழ்க்கை முதலானவையும் அவ்வுத்தியினால் வெளிப்படுத்தப்படுகின்றன. 'இருள் அரக்கன்' 'எண்ணச் சுழல்' போன்ற உருவகங்களும், உவமைகளும் மொழி நடையில் காணக் கூடிய உத்திகள். இராமநாதன், சீதை எனும் பெயர்கள் இராமாயணக் கதை மாந்தர்களை நினைவு படுத்து கின்றன. தயாளனின் தரங்கெட்ட நடவடிக்கை அவனுடைய பெயருக்கு முரண்பாடாக உள்ளது. இதுவொரு முரண் உத்தியாகும் காந்தியடிகளின் படம் கதையின் கருப் பொருளுக்கு அணி செய்யும் பின்னணியாக விளங்குகிறது. ஆசிரியர் தம் அறிவுரையையும் நேரடியாகக் கூறுகிறார். இராமநாதன் (தந்தை)× தயாளன் (மகன்) பாத்திரப் படைப்பு இன்னொரு வகையில் முரண் பாடுடையதாகும். கதைத் தலைவன் தயாளனாக இருப்பினும் கதையில் அவனுடைய பங்கு தூக்கலாக இல்லை அவ்வாறு அமைவதற்குப் பின்னோக்கு உத்தியில் தந்தையார் கடந்த காலத்தைக் கூறுவதும், கமலம் கண்ணன் ஆகியோரின் பங்கும் காரணங்களாகின்றன. கதை நிகழ்வு ஓரிரவுக்குள் முடிகிற தென்றாலும் அதனுடைய பின்புலம் பல ஆண்டுகளைக் கடக்கின்றது. இவ்வாறு இக் கதையில் உத்திகள் இடம் பெற்றுள்ளன.

"விமோசனத்தின் கதைச் சுருக்கம் கீழ்க் கண்டவாறு அமைகிறது.

வேலைக்குச் சென்றிருந்த தன் கணவன் துரைசாமி வெகு நேரம் ஆன பிறகும் வீடு திரும்பாததை நினைந்து அங்கயற்கண்ணி கற்சிலைபோல் வாசலில் உட்கார்ந்து கொண்டு தெருக்கோடியைக் கவனித்துக் கொண்டிருந்தாள். துரைசாமி வீட்டிற்கு வந்து நிலை குலைந்து போய் இருந்த மனைவியை உலுக்கிக் காரணத்தை வினவினான். அவள் பழைய சம்பவத்தை நினைந்து, "அந்தப் பாழும் கடைப் பக்கம் போய்விட்டீங்களோ என்று தான்!" என்று காரணத்தைச் சொன்னாள். அதற்கு அவன் அடுத்த வாரத்தில் கள்ளுக் கடைகளையெல்லாம் மூடிவிடப் போகிறார்கள் என்றும் அதனால் அவள் தன் மீது பயங்கொள்ளத் தேவை இல்லை என்றும் உணர்ச்சி மேலிடக் கூறினான். அவளோ, "எல்லாம் அந்த மவராசன் காந்தி புண்ணியம். அவரு நல்லாயிருக்கணும்!" என்று மகிழ்ந்தாள் இத்துடன் கதை முடிகிறது.

இக் கதையில் அங்கயற்கண்ணியின் திடீர்த் திகைப்பிற்கும் தடுமாற்றத்திற்கும் காரணம் என்ன என்பதை ஆசிரியர் அடுத்தடுத்த பழங்கால நிகழ்ச்சிகளைப் பின்னோக்கிக் காட்டுவதன் வாயிலாக வெளிப்படுத்துகிறார். அந்தப் பின்னோக்கு உத்தியில் துரைசாமியும், அவனுடைய மனைவியும், மகனும் வளைய வரு கின்றார்கள். மேலும் சொன்னால், துரைசாமியே பின்னோக்கு உத்தியில் விரியும் கதைக்குக் கதைத் தலைவன் ஆவான். கதையாசிரியர், குடிகாரன் திருந்தினாலும் உலகம் அவனைச் சந்தேகக் கண் கொண்டே கவனிக்கின்றது என்கிற ஓர் உண்மையை உளவியல் அடிப்படையில் புலப்படுத்தியுள்ளார். அங்கயற்கண்ணி, சிக்மண்ட் பிராய்டின் (Sigmund Freeidn) உளப்பகுப்பாய்வின் படி ஓர் உள நோயாளியே ஆவாள். அவளுடைய நரம்புத் தளர்ச்சி நோய் 'Anxietv Neurosis' ஆகும்.

நாகய்யா இளம் ஆசிரியன். மாவடிக் கிராமத்திற்கு வந்து நான்காண்டுக் காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தான். அந்தக் கிராமத்தார் குடித்தனர். சங்கிலி என்கிற பதின் பருவத்துப் பெண்ணும் குடித்தாள். நாகய்யாவின் அறிவுரையினால் சங்கிலி குடிப்பழக்கத்தை ஒழித்தான். நாகய்யா அவள் அழகில் மயங்கினான். அவளை அவனும் அவனை அவளும் விரும்ப, நாகய்யா மணக்க முன்வந்து சங்கிலியின் அண்ணனிடம் பெண் கேட்டான். சங்கிலியின் அண்ணன் சங்கிலியை வேறொருவனுக்குப் பேசி முடித்து நிச்சயம் செய்திருந்த செய்தியை நாகய்யாவிடம் சொல்லி மறுத்து விட்டான். சங்கிலிக்குத் திருமணம் நடந்து கணவனின் ஊராகிய கருங்காட்டிற்குச் சென்று விட்டாள் நாகய்யாவிற்குப் புளியங் குளத்திற்கு மாற்றலாயிற்று. அவ்வூரில் தங்க அவனுக்கு வசதி இல்லாதபடியால் கருங்காட்டிற்குச் சென்று தங்கலானான். சங்கிலி அவ்வூரில் வாழ்க்கை பட்டிருப்பதை அறிந்தவன் ஆதலினால் நாகய்யா அவன் தங்கியிருந்த வீட்டின் சொந்தக்காரனிடம் சங்கிலியைப் பற்றி வினவினான். அந்த வீட்டுக்காரன், சங்கிலி தன்னுடைய மனைவி என்றும் ஒரு குழந்தையைப் பெற்று விட்டுக் காலமாகி விட்டாள் என்றும் பதிலுரைத்தான். அக் குழந்தையின் பெயர் நாகய்யா. சங்கிலி வைத்த காதலனின் பெயர் அது. நாகய்யாவின் மனமும் தலையும் சுழன்றன. இதுவே 'மதுவிலக்'கின் கதை.

கதை, தாமிரபரணி பாயும் மாவடிக் கிராமத்தின் இயற்கை வருணனையுடன் தொடங்குகிறது. நீண்ட கதை, நாவல் வடிவத்திற்குரிய இயல் பகுப்புடன் அமைந்துள்ளது. மூன்று இயல்கள் வெறும் எண்களைக் கொண்டு பிரிக்கப்பெற்றிருக்

கின்றன ; நெகிழ்ச்சிப் பின்னலை (Loose Plot) உடையது. சிறுகதைக்குரிய அளவான கதை மாந்தர்கள் இல்லாமல் அதிகம் பேர் இடம் பெற்றுள்ளனர். மொழி நடையில் உவமைகள் ஆங்காங்கே ஒளிர்கின்றன. படர்க்கைக் கூற்றில் நோக்குநிலை. ஓரிடத்தில் நாகய்யாவின் மனவோட்டம் பட்டுத் தெறிக்கின்றது. கதையின் இயக்கம் தொடக்கத்திலிருந்து இறுதி வரை முன்னேறிச் செல்கிறது. குறு நாவலுக்குரிய கதைக் கனத்தை உடையது.

இறுதியாக "இராவணாகாரம்'. இக்கதையின் சுருக்கம் இது :

சாமிநாதப் பிள்ளையின் கள்ளுக் கடைக்கு முன்னால் சத்தியா கிரகிகள் கள்குடிக்கப் போனவர்களைத் தடுத்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இச் செய்தியைக் கேள்விப் பட்ட அவரின் தம்பி தம்பியப்பா' ஆத்திரங் கொண்டு கையில் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு-இராவணன் அவதாரம் எடுத்துக் கடையை நோக்கி விரைந்தார். கள் குடியர்களை மறிப்பவர்களைப் பார்த்து உரக்கக் கத்தி அச்சுறுத்தினார் ஆனால், படைத்தளபதி பத்மநாபன் முன்னே வந்து அவருடைய துப்பாக்கியின் முன்னால் தன் மார்பைத் திறந்து காட்டினான். தம்பியப்பா வெறியேறி அவன் மார்பில் துப்பாக்கி முனையை வைத்த போது சி.ஐ.டி. அனந்தன் குறுக்கே பாய்ந்து துப்பாக்கியைத் தட்டிவிட அது கீழே விழுந்தது. உடனே அனந்தன் தன் துண்டினால் தம்பியப்பாவின் கைகளைக் கோர்த்துக் கட்டிக் காவல் துறையினர், விடும்படிக் கோரியும் கேளாமல், அவரைக் காவல் 'வேனில்' ஏற்றிக் காவல் துறைக் 'கமிஷனரிடம் கொண்டு சென்றான். சத்தியாகிரகிகள் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

இக்கதை உரையாடலுடன் தொடங்குகிறது, தொடர்ந்து முன்னோக்கியே வளர்கிறது. கதை என்று சொல்வதை விட ஒரு மறியல் போராட்ட நிகழ்ச்சி (an incident) எனலாம். அசுர கணத்தை - இராவண அமிசத்தை - தம்பியப்பாவிடம் காட்ட. விழைந்த ஆசிரியர் இராவணனின் வீரதீர கர்சனைகளை முன் வைக்கிறார் ; புதிய இராவணர்களைப் படைத்துக் காட்டுகிறார் ; கதைமாந்தர் படைப்பில் கவனம் செலுத்தியல்தான் கதைக்குப் பிறிதொரு பெயரினையும் தாராமல் 'இராவணாகாரம்' என்று பெயர் வைத்திருக்கிறார்; கிருஷ்ணாம் பேட்டையை இராவணனின் தர்பார் மண்டபம் என்று குறிப்பிட்டுள்ளார். கதையின் வலிமைக்குக் குறியீடு (Symbolism) கருவாய்த் திகழ்கிறது. படர்க்கைக் கூற்று நிலை.

## குறிப்புகள்

118. Where the vision is blurred, techuique, too, is flaured.
— Vasant A Shahane, Ruth Prawer Jkabavala, P. 144.

119. பி. கோதண்டராமன், இலக்கியமும் விமரிசனமும், பக் 218—20.

---

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## வில்லியின் பாரதம் ஒரு கண்ணோட்டம்

ஆறு- காளிதாசன், பி.லிட்., எம் ஓ எல், பி எட்.,
கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

அசுவத்தாமன் உபபாண்டவர்களைப் பாண்டவர்கள் என்று எண்ணி அவர்தம் தலைகளைக் கொய்து, கொணர்ந்து மிடுக்காகத் துரியோதனனிடம் அவற்றைக் காட்டுகின்றான் அத்தலைகலைக் கண்ட துரியோதனன் இரங்கி

இருகு லத்தி லெமக்கும் அவர்க்கும் இங்கு
ஒருகு லத்தினு முண்டென வில்லையாற்
குருகு லத்தில் கொழுந்தினைக் கிள்ளினை
வருகுலத் தொடு மாசறு மைந்தனே (15 - வி 10. 297)

எனக் கூறுவதாக வில்லிபுத்தூரார் காட்டுகிறார். தன்வினை தன்னையே சுட்டது என்று துரியோதனனைக் கூறச்செய்து, இறப்பிற்கு முன்னதாக அவன் தன் தவறுகளை உணர்ந்ததாகப் படைத்துக் காட்டும் பாங்கும் குருகுலம் அழிந்து விட்டதற்காக அவன் வருந்துவதாய்க் காட்டி அவன் பண்பினை உயர்த்திக் காட்டும் சிறப்பும் வில்லிபுத்தூராரின் நடுநிலைக்கும் புலமைச் சிறப்பிற்கும் சான்றாகும். அசுவத்தாமனை இடித்துரைத்துக் கழிவிரக்கம் கொள்ளும் துரியனின் பாத்திரம் வில்லியின் புதிய படைப்பாகும்.

அமைப்பு முறையாலும் பொருள் முறையாலும் வியாச பாரதத்தை முதல் நூலென்றும் வில்லி பாரதத்தை வழி நூலென்றும் பிள்ளைப் பாரதத்தைச் சார்பு நூலென்றும் கூறுவர். தமிழ்மொழி அளவில் பார்க்கும்போது வில்லி பாரதம் முதல் நூல் என்னும் பெருமைக்கு உரியதாகும். வில்லியார் காப்பிய இயக்கியங் களையும் தண்டி கூறிய பெருங்காப்பிய இலக்கணத்தையும் மனதிற் கொண்டு சிறந்தபொருள்களைத் தம் நூலில் அமைத்தும் பாடியுள்ளார் எனக் கருதாலம்.

வில்லிபுத்தூரார் விநாயகக் கடவுள் வாழ்த்துடன் தமது காப்பியத்தைத் தொடங்குகிறார். தாம் வைணவரானாலுய் விநாயகரை வாழ்த்துவதற்குக் காரணம் கூறுவார்போல, வியாசர் சொல்ல விநாயகர் எழுதினார் என்ற செய்தியைக் கடவுள் வாழ்த்தில் வைத்துப் பாடியிருப்பது அவரது சமயப் பொறையைக் காட்டுகிறது. வண்டமிழ் வாழ் என்று இவர் வாழ்த்துப் பாவில் பாடி இருப்பது புதிய வாழ்த்து எனக் கருதலாம். இவ்வாழ்த்திற்குப் பின்னர் அறிவிலேன் எனத் தம்மைச் சிறுமை உடையவராகக் கருதி அவையடக்கம் கூறுவது இவருடைய சிறந்த பண்பை எடுத்துக் காட்டுகிறது.

## செய்ந்நன்றியறிதல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை"
செய்ந்நன்றி கொன்ற மகற்கு (திரு.110)

என்னும் குறள் செய்ந்நன்றின் அறிதலின் சிறப்பைக் காட்டும். கம்பர் தாம்பாடிய இராம காதையில் தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலைப் பாடியதைப் போலவே வில்லிபுத்தூராரும் தம்மை ஆதரித்த கொங்கர் பூபதியாய வக்கபாகை வரபதி ஆட்கொண்டானைப் பாரதத்துள் மூன்று இடங்களில் சுட்டியுள்ளார். முன்னோர் சென்ற காப்பிய வழியில் சென்று நன்றி பாராட்டிய வில்லிபுத்தூரார் திறம் போற்றத்தக்கது.

## வில்லிபுத்தூராரின் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும்

வடமொழிக் கதையைப் பாடு பொருளாகக் கொண்டு காப்பியம் படைத்திருந்தாலும் தாய் மொழியாம் தமிழையும் பிறந்த தமிழ் நாட்டையும் தம் நூலில் தகுந்த முறையில் பாடி இருப்பது அவரது மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் காட்டுகிறது தலப்பயணம் சென்ற அருச்சுனன் மதுரையை அடைந்தான் என்ற செய்தியை

இளவண்டமி ழெழுதேடுமுன் னெதிரேறிய துறைசூழ்
தளவங்கமழ் புறவஞ்செறி தண்கூடல் புகுந்தான்

எனக் கூறுகின்றார் (1:651)

ஞான சம்பந்தரின், புனல் வாதத்தைக் குறித்த ஆசிரியர் தமிழை இளவண் தமிழ் என வாய் மணக்கப் பாடுவது இவரது தமிழ்ப் பற்றை எடுத்துக்காட்டுகிறது.

செந்தமிழ்க் கன்னிநாடு எனப் பாண்டி நாட்டைக் குறிப்பிட்ட வில்லிபுத்தூரார். சகாதேவன் பிற மன்னர்களை வென்றுதிறைப் பொருள் பெற்றதாகக் கூறிப் பாண்டிய மன்னனிடம் மட்டும் போரிடாமல் உறவுடன் திறைப் பொருள் பெற்றுச் சென்றான் எனக் குறிப்பிடுவது அவரது நாட்டுப்பற்றை எடுத்துக் காட்டுகின்றது எனக் கருதலாம்.

வில்லிபுத்தூரார் பாரத நாட்டிடமும், வைணவ சமயத்திடமும் கொண்டிருந்த பற்றுதலைக் காட்டிலும் தமிழினத்தின் மீது அவர் கொண்டிருந்த பற்றே மிகுதி எனக் கருதலாம். இதைக் காப்பிய நாயகர்களைப் பெருமைப்படுத்து வதற்காகத் தமிழ் வேந்தர்களைச் சிறுமை செய்ய வேண்டி அவசியம் ஏற்பட்ட விடத்தும் அதைத் தவிர்த்திருக்கிறார் என்று சிலப்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் வில்லியின் நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் பாராட்டுவதால் அறியலாம்.

146 TO 287 PAGE MISSING IN BOOK

## வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப் பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்துத் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப் பெறும் இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பி யனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

## கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| யாழ் நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள் | ரூ | 50 | 00 |
| கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர் | ரூ. | 30 | 00 |
| கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு) | ரூ. | 60 | 00 |
| இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ் | ரூ. | 6 | 00 |
| கபிலர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ | 4 | 00 |
| நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 3 | 00 |
| மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு - பா. வே. மாணிக்க நாயக்கர் | ரூ. | 2 | 00 |
| கவியரசு நினைவு மலர் | ரூ. | 1 | 00 |
| தமிழரசி குறவஞ்சி | ரூ. | 0 | 75 |

**பிற வெளியீடுகள் :**

| | | | |
|---|---|---|---|
| கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்] | ரூ. | 4 | 50 |
| கலைக் கூத்தன் கவிதைகள் | ரூ. | 6 | 00 |

விற்பனைக் கழிவு 20% உண்டு அஞ்சற் செலவு தனி.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613002.